## தமிழக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூபாய் 200 கோடி !

"தமிழ்நாட்டிற்கு, 1976–77-ஆம் ஆண்டின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூபாய் 200 கோடி அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது."

"தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று பிரதமர் விருப்பம் தெரிவித்திருக்கிருர். எனவேதான், திட்ட ஒதுக்கீடு அதிகரிக்கப் படுகிறது. தமிழ்நாட்டில் சராசரி நபர் முதலீடு அதிகரிக்கப்பட வகைசெய்யப் படவேண்டும் என்பது மத்திய அரசின் மனப்பூர்வமான விருப்பம் ஆகும்."

"தமிழ்நாட்டு மக்களுக்குத் தூய்மையான, திறமையான நிருவாகத்தை அளிப்பதே நமது முயற்சியாக உள்ளது."

—கே. பிரம்மானந்த ரெட்டி,
உள்துறை அமைச்சர்.

(மக்களவையில் 10-3-'76 அன்று கூறியது.)


# தமிழரசு

மலர் 6. இதழ் 18.
16·3·1976

# நல்ல முடிவுகளையே நாம் எடுப்போம்!



செய்திப் பத்திரிகைகள் மீதும், தனியார் மீதும் முன்பிருந்த தி.மு.க. அரசு தொடர்ந்திருந்த அவதூறு போன்ற வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல், மோசடி ஆகியவை தொடர்பான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் முன்பிருந்த அரசினால் திரும்பப் பெறும்படி உத்திரவிடப்பட்ட வழக்குகள் யாவும் மீண்டும் விசாரிக்கப்படும். தவறுகள் நிரூபிக்கப்பட்டால் தவறு செய்தோர்க்கு தண்டனை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதாவது—காவல் துறையின் புலன் விசாரணை நடைபெற்று, பிறகு கடந்த ஜனவரி 31-ஆம் தேதியோ, அல்லது அதற்கு முன்போ திரும்பப் பெற உத்தரவிடப்பட்ட வழக்குகள் மறுபடி ஆராயப்படும்.

கூட்டுறவுச் சங்க மோசடி வழக்குகள் பல முந்தைய அரசினால் திரும்பப் பெற உத்தரவிடப்பட்டன. மிகப் பெருந் தொகைகள் மோசடி தொடர்புடையவை அந்த வழக்குகள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இறவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், சேலம் மாவட்ட இறவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள், தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் பொய்யான பெயர்களில் கடன் தொகை வழங்கப்பட்டது ஆகியவை குறிப்பிடத்தக்க கூட்டுறவு முறை கேடு, ஊழல்களாகும்.

லஞ்ச ஊழல் நிர்வாகச் சீர்கேடு அல்லது முறைகேடு ஆகிய குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், கூட்டுறவுச் சங்க நிர்வாக அங்கங்கள் ஆகியவை கலைக்கப்பட்டு சிறப்பு அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

தி.மு.க. அரசினால் ரத்து செய்யப்பட்ட பரிசுச் சீட்டு திட்டத்தை மீண்டும் கொண்டு வரப்படுமா என்று கேட்கப்படுகிறது. இது பற்றி ஆராயப்படும்.

சிலை வைப்பது, நினைவாலயம் எழுப்புவது போன்றவற்றிற்குப் பொதுப் பணத்தைச் செலவிடுவது தேவையற்றது; விரும்பத்தகாதது என்று பிரதமர் அவர்களே கருத்துத் தெரிவித்திருப்பதால் புதிதாக அது போன்ற எதற்கும் செலவிடவோ, அனுமதி வழங்கவோ இயலாது. ஆனால், சமுதாயத்தின் பொது நலனுக்குப் பயன்தரக் கூடிய நினைவாலயங்கள் அமைக்க முன்வருவார்களேயானால் அவற்றின் தன்மை, பலன் ஆகியவற்றின் அடிப்படையில் அவை அமையலாம். நன்றாகவும் திறமையாகவும் நடைபெறும் கூட்டுறவு அமைப்புகள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கலைத்துவிடும் எண்ணம் அரசுக்கு இல்லை; ஆனால், முறைகேடானவை பற்றி அரசு பரிசீலிக்கும்.

சென்னை நகரில், தங்களுக்கு வழங்கப்பட்ட 'ஸ்பிரிட்' லைசென்சை முறைகேடாகவும், தவறாகவும் பயன்படுத்தி வந்த ஆறு வியாபாரிகளின் உரிமம் (லைசென்ஸ்) ரத்து செய்யப்பட்டது. இது போல, வழங்கப்பட்ட உரிமத்தை முறை தவறிப் பயன்படுத்துவோர் தொடர்பாக அரசுக்கு வரும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து தவறுகள் களையப்படுகின்றன.

மதுவிலக்கு பற்றி மறுபரிசீலனை உண்டா என்று கேட்பவர்கள் ''தேசம் முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும்'' என்று பிரதமர் அவர்கள் கூறியதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

வெளியே விற்கப்படுகிற விலையைவிட அரசு நுகர் பொருள் வாணிபக் கடைகளில் (சிவில் சப்ளைஸ்) விலைகள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ராகி வெளியில் கிலோ ரூ. 1.30 அரசாங்கக் கடைகளில் கிலோ ஒரு ரூபாய்தான். மிளகாய் வெளியே கிலோ ரூ. 8. ஆனால், இங்கோ ரூ. 5தான். எல்லாப் பொருள்களுமே அரசு நுகர் பொருள் வாணிபக் கடைகளில் குறைவாக இருப்பதால் அங்கே வாங்குவதுதான் பொதுமக்களுக்கு நல்லது.

வீட்டுவசதி வாரிய வீடுகள் கட்ட, அந்த வீட்டு நிலங்களுக்கு கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை நீதிமன்ற உத்தரவின் காரணமாக அதிகமாகியதால் வீட்டின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. நஷ்டமில்லாமலும், லாபமில்லாமலும் இவற்றை நடத்த வேண்டியிருப்பதால் வாடகையை உயர்த்தும்படி நிபுணர் குழு தெரிவித்ததால் வாடகையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது திட்டக் காலத்தில் சென்னை நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்காகக் கட்டப்படவிருக்கும் இந்த வீட்டு வசதித் திட்டத்திற்காகத் தொழிலதிபர்களுக்கு மொத்தச் செலவில் 50 சதவிகிதம் கடனும், 25 சதவிகிதம் உதவித் தொகையும் வழங்கப்படும். இந்த வீடுகள் அனைத்தையும் அரசே கட்டித் தரும். 'அருணா சுகர்ஸ்', 'கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ்', தமிழ் நாடு சிமெண்ட் தொழிற்சாலை, அரக்கோணம் ஸ்டீல் தொழிற்சாலை, சில மாவட்டக்கூட்டுறவுச் சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் தொழிலாளர்களுக்காக வீடு கட்டித் தரும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஈ. எஸ். ஐ. சந்தாத் தொகைகளை உரிய காலத்தில் செலுத்தாத தொழிலதிபர்கள் மீது முறைப்படி தொடர்புடைய துறைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**—தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் 3—3—76-ல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அறிவித்த கருத்துரையின் தொகுப்பு.**

# அரிசி விலையைக் குறைத்தோம்!
# அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்தோம்!!

நமது பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டத்தின் கீழ், அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் விலையைக் குறைத்திடுவதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழக மக்கள் அனைவருக்கும் அன்றாடம் தேவைப்படுவது அரிசியாகும். எனவே, அரிசி விலையைக் குறைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதுபோலவே, மாவட்டங்களுக்குள்ளே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நெல், அரிசி ஆகியவைகளைக் கொண்டு போவதற்கு இதுவரை இருந்து வந்த கட்டுப்பாட்டையும் தமிழ்நாடு அரசு நீக்கிவிட்டது. கொள்முதல் நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு நிறுத்தி விட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இம்முடிவுகளைப் பற்றி **மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள்** 10-3-76 அன்று பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பின் கண்டவாறு அறிவித்தார்.

## அரிசி விலையைக் குறைத்தோம்!

மோட்டா ரகம், மற்றும் நடுத்தர ரக அரிசியின் சில்லறை விலை குறைக்கப்பட்டு ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மோட்டா ரக அரிசி கிலோ ரூபாய் 1-80-க்கும் நடுத்தர ரக அரிசி கிலோ ரூபாய் 1-90-க்கும் இதுவரை விற்கப்பட்டு வந்தது. இவ்விரு ரகங்களின் விலை குறைக்கப்பட்டு கிலோ ரூபாய் 1-60 என்று விற்கப்படும்.

மாத வருவாய் 500 ரூபாய்க்கு மேற்பட்டவர்கள், இதுவரை எந்த ரக அரிசியை வாங்கினாலும் கிலோ ரூபாய் 2-50 வீதம் வாங்க வேண்டியிருந்தது. இனிமேல் அவர்களுக்கும் மோட்டா ரக, நடுத்தர ரக அரிசிகளை கிலோ ரூபாய் 1-60 வீதம் விற்கப்படும்.

## சன்னரக அரிசியின் விலையும் குறைந்தது!

சன்னரக அரிசி இதுவரை கிலோ ரூபாய் 2-10 வீதம் விற்கப்பட்டு வந்தது. இனிமேல் சன்னரக அரிசியை கிலோ ரூபாய் 2-00 வீதம் விற்கப்படும்.

மிகச் சன்னரக அரிசியைப் பொறுத்த வரையில் விலையில் மாற்றம் இல்லை; கிலோ ரூபாய் 2-25 வீதம் விற்கப்படும்.

தற்பொழுது கையிருப்பில் உள்ள குறுவை அரிசி இருப்பு முழுவதும் தீரும் வரையில் இப்புதிய விலைகளே நீடிக்கும். அதன் பிறகு சம்பா அரிசிக்கு விலை நிர்ணயிக்கப்படும். இப்புதிய விலையில், நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் எல்லா சில்லறை விற்பனைக் கடைகளிலும் அரிசி விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கொள்முதல் நிறுத்தப்பட்டது!

தமிழ்நாட்டில் உடனடியாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் நிறுத்தப்படும். குறுவைப்பட்டத்தில் 3.5 இலட்சம் டன்னும் (அரிசி), சம்பாபட்டத்தில் 3.7 இலட்சம் டன்னும் (அரிசி) கொள்முதல் செய்யப்பட்டு, இலக்கையும் தாண்டிவிட்டதால், உடனடியாகக் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட முடிவு செய்யப்பட்டது.

## ஆதரவு விலை அளிக்கப்படும்!

எந்த விவசாயியாவது தன்னிடம் உள்ள உபரி நெல்லை அரசுக்கு விற்க விரும்பினால், அதைத் தமிழ்நாடு அரசு, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு வாங்கும். எந்த விவசாயியும் பண நெருக்கடி காரணமாக விலை குறைத்து விற்க வேண்டிய நிலை ஏற்படாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்யும். விவசாயிகளுக்கு ஆதரவு விலை கொடுத்து அவர்களிடமுள்ள நெல்லை வாங்கப்படும்.

## கட்டுப்பாடு நீக்கப்பட்டது!

ஒரு மாவட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து அதே மாவட்டத்தின் மற்றொரு பகுதிக்கு நெல், அரிசி கொண்டு செல்வதற்கு இதுவரை இருந்து வந்த நடமாட்டக் கட்டுப்பாடு, கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற எல்லா மாவட்டங்களிலும் நீக்கப்படுகிறது. ஆனால் கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ள மதுரை, நெல்லை, கோவை ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த சில வட்டங்கள் 'அறிவிக்கப்பட்ட பகுதிகள்' ஆகக் கருதப்பட்டு அந்த வட்டங்களின் எல்லைப் பகுதிகளில் மட்டும் நடமாட்டக் கட்டுப்பாடு நீடிக்கும்.

## சென்னை நகரின் தேவை

சென்னை மாநகர மக்களின் அரிசித் தேவையை ஈடு செய்ய செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலிருந்து அரசு சார்பிலோ அல்லது கூட்டுறவுத் துறை சார்பிலோ அரிசி வாங்கப்பட்டு நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் அல்லது கூட்டுறவு பண்டக சாலைகள் மூலமாக விநியோகிக்கப்படும்.

## பர்மிட் முறை

குடும்பத் தேவை, சொந்த உபயோகம் ஆகியவற்றுக்காக ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசி கொண்டு வர தற்போது உள்ள பர்மிட் முறை, நிபந்தனை ஆகியவை தளர்த்தப்படும்.

## ஓராண்டுக்குக் கவலை இல்லை!

தமிழக உணவு நிலைமை மிகவும் மன நிறைவு தருவதாக உள்ளது. அடுத்த ஓராண்டிற்கு உணவு முனையில் கவலை ஏதுமில்லை.

# பள்ளுப் பாடுவோமே!

கே. சி. எஸ். அருணசலம்

தொகையரு

தூங்கி வழிந்திட்ட
வாழ்க்கையின் மேலொரு
சாட்டையடி கொடுத்தோம்
பொழுது விடிந்திடும்
பாதையிலே அதைப்
போகும்படி விடுத்தோம்.

பல்லவி

பத்து வருடக்
கணக்கை எழுதிப்
பட்டியல் நீட்டுகிறோம் — அதில்
எத்தனை எத்தனை
சாதனை கண்டோம்
என்பதைக் காட்டுகிறோம்

சரணம்

1. மன்னர் மகுடமும் செங்கோலும்—நம்
மண்ணில் நொறுங்கி விழுந்தாச்சு
இன்னும் மானியம் ஏனென்றோம்-அதில்
எழுந்த போரினில் நாம் வென்றோம்.

2. பதினாறு அடிவேங்கைப்
புலியாகி நம் நாட்டின்
நிதியுண்டு விளையாடி வந்த—அந்தப்
பதினாலு வங்கியை
மக்களின் பெயரிலே
பட்டயம் செய்துவிட்டோம்.

3. கள்ளக்கடத்தல் பணவீக்கம் மக்கள்
கண்ணீரை விற்றுப் பொருளாக்கும்
தில்லுமுல்லுச் செயல்கள் அத்தனையும் இன்று
சிந்தை நடுக்கிடச் செய்துவிட்டோம்.

4. உழைக்கப் பிறந்திட்ட மக்கள் — எத்தனை
சட்டங்கள் சாத்திரம் சாதியெனும் பேரில்
ஒடுக்கப் பிறந்திட்ட மக்கள்
வாழப் பிறக்காத மக்கள்—இங்கு
வாழ்வு பெற இன்று வழிகாட்டி விட்டோம்.

5. தனியார் கடன்களைத் தள்ளி வைத்தோம்—இன்னும்
சட்டங்கள் வருமென்றும் சொல்லி வைத்தோம்
கிராமிய வங்கிகள் உருவாகும்—சிறு
குடியானவர்களின் துணையாகும்.

6. பாருலகெல்லாம் சாந்தி தவழ்ந்திட — என்றும்
பாடு படுவதே நம் நினைவு
போரும் சுரண்டலும் துன்பமும் இல்லாத
வையகமே நம் பொன் கனவு.

7. ஜனநாயகத்துக்கு உலைவைக்க வந்திட்ட
சதியை முறித்து விட்டோம்
நவ-பாரதம் தன்னை உருவாக்க மங்கல
நாளும் குறித்து விட்டோம்.

[நன்றி: வானொலி நிலையம், சென்னை.]

சாமி

# அதிக மகசூல் தரும் புதிய ரகங்கள்



— ஆர்.எம்.

இந்தியப் பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டம், இந்தியா வளம்பெறவும், அதன்பயனாய் இந்திய மக்கள் நலம் பெறவும் வழிகாட்டியுள்ளது. இருபது அம்சத் திட்டத்தின் முதல்திட்டம், அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதாகும். இத்திட்டத்தை நிறைவேற்றிட தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை விரைந்து செயல்பட்டு வருகிறது.

வறட்சியும், புயலும் அடுத்தடுத்து வந்து தமிழக வேளாண்மை வளர்ச்சியைத் தடுத்திட முயன்றாலும், தமிழக உழவர் பெருமக்களின் தளராத முயற்சியினாலும், தமிழக வேளாண்மைத் துறையின் இடையறாத உழைப்பினாலும் தமிழக வேளாண்மை முன்னேறி வருகிறது. உணவுதானிய உற்பத்தியில் மட்டுமின்றி, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, கரும்பு, காய்கறிகள், பழங்கள் போன்ற இன்றியமையாப் பொருள்களின் உற்பத்தியிலும் தன்னிறைவு பெற்று உபரி மாநிலமாகத் திகழ வேண்டும் என்பதற்காகத் தமிழ் நாடு வேளாண்மைத் துறை தற்பொழுது முனைப்பான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி பின்கண்ட அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| | இலட்சம் டன்கள் |
|---|---|
| அரிசி | 61.00 |
| சோளம் | 4.69 |
| கம்பு | 3.55 |
| மக்காச் சோளம் | 1.85 |
| கேழ்வரகு | 3.28 |
| இதர தானியங்கள் | 3.63 |
| மொத்தம் | 78.00 |

தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதனால் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான தூண்டுதலும், நிதி உதவியும், வழிகாட்டுதலும் இந்திய அரசிடமிருந்து அதிகமாகக் கிடைத்திடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நல்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக உழவர் பெருமக்கள் உழைத்தால், உழவர் பெருமக்களின் எதிர்காலம் ஒளி மயமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்வதற்கு தமிழக உழவர் பெருமக்கள் அனைவரும் அதிக மகசூல் தரும் புதிய ரகங்களைப் பயிரிடுவது மிகவும் இன்றியமையாததாகும். எனவே அதிக மகசூல் தரும் புதிய ரகங்களைப் பற்றிய விவரங்களைத் தமிழக உழவர் பெருமக்களுக்கு காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

## ஆடுதுறை-31

'ஐ. ஆர். 8' நெல் ரகத்தையும், 'வளர்ப்பு-340' என்ற நெல் ரகத்தையும் கருஒட்டுச் சேர்த்து ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தாரால் உருவாக்கப்பட்ட இந்த நெல் ரகம் குறுகிய காலத்தில் (100-105 நாட்கள்) அதிக மகசூல் கொடுக்கும் திறன் கொண்டது. தமிழகத்தின் பல மாவட்டங்களில் நடத்திய அனுசரணை ஆராய்ச்சிச் சோதனைகள் எல்லாவற்றிலும், ஏனைய ரகங்களை விட இந்த ரகம் அதிக மகசூல் அளித்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் நடத்தப்பட்ட உர பரிசோதனைகளின் மூலம் இந்த ரகம் குறைந்த அளவு உரத்திலேயே (ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து) அதிக மகசூல் அளிக்கும் எனத் தெரிய வந்தது. இதே மாவட்டத்தில் பல இடங்களில் நடத்தப்பட்ட உழவியல் பரிசோதனைகளில் 'ஆடுதுறை-31' ரகம் உயர்ந்த அளவாக ஏக்கருக்கு 3,840 கிலோ (மாவுக்கு சுமார் 46 கலம்) அளித்து மற்ற ரகங்களைக் காட்டிலும் சிறந்து விளங்கியது. இந்த ரகம் மத்திம உயரமாகவும், செங்குத்தாகவும் சாயாமலும் இருக்கும். இதன் தூர்கள் நெருக்கமாக இருப்ப

துடன் ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையவை. இந்த ரகம் நடுத்தர உயரமாய் இருப்பதால் அறுவடை செய்வதும், அடிப்பதும் எளிதாக இருக்கிறது. அறுவடையின்போது சிறிது மழையிருந்தாலும் விதைகள் முளைப்பதில்லை. அரிசி குட்டை பருமன் ரகத்தைச் சேர்ந்தது. சமையலுக்கு ஏற்றது. வயிற்று வெள்ளை இல்லாததால், அறைக்கும்போது அரிசி அதிகமாக இடிவதில்லை. ஏக்கருக்கு சராசரியாக 2,500 கிலோ (மாவுக்கு 30 கலம்) மகசூல் அளிக்கவல்லது. இந்த நெல் ரகம், குறுவை, கார் அல்லது சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

## ஐ. இ. டி. 1722

'ஐ. ஆர். 8' நெல் ரகத்துடன் 'தாடுகன்' என்ற நெல் ரகத்தை கரு ஒட்டுச் சேர்த்து புதுடெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்ட இந்த ரகமும் குறுகிய காலத்திலேயே (100-104 நாட்கள்) அதிக மகசூல்



கொடுக்கவல்லது. ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் குறுவையில் நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு 2,020 கிலோ மகசூல் அளித்தது. மற்றும் பாலூரில் உள்ள பல பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் நவரைப் பட்டத்தில் நடத்திய சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு 2,750 கிலோ மகசூல் அளித்தது. தஞ்சை மாவட்டத்தில். பல இடங்களில் நடத்தப்பட்ட அனுசரணை ஆராய்ச்சி சோதனைகளில் 'ஆடுதுறை-31' ரகத்திற்கு அடுத்தபடியாக, ஏக்கருக்கு 1,990 கிலோ (மாவுக்கு 24 கலம்) மகசூல் கொடுத்தது. இதன் தாள்கள் நடுத்தர உயரமாகவும், தூர்கள் சற்று விரிந்த நிலையிலும் இருக்கும். தூர்கள் யாவும் ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையது. சராசரியாக ஏக்கருக்கு 2,200 கிலோ(மாவுக்கு 26 கலம்) மகசூல் அளிக்கவல்லது. அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது. சமையலுக்கு ஏற்றது இந்த நெல் ரகம் குறுவை கார் அல்லது சொர்ணவாரி, நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

## பூசா-33

'மேம்படுத்தப்பட்ட சபர்மதி' என்ற மணமுடைய நெல் ரகத்துடன், 'ரத்னு' என்ற நெல் ரகத்தை கரு ஒட்டுச் சேர்த்து புதுடெல்லியில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரால் உருவாக்கப்பட்ட இந்த நெல் ரகமும் குறுகிய காலத்தில் (100-105 நாட்கள்) அதிக மகசூல் அளிக்க வல்லது. தமிழ் நாட்டில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையங்களாகிய ஆடுதுறை, திரூர்குப்பம், பாலூர் அம்பா சமுத்திரம், பட்டுக்கோட்டை ஆகியவற்றில் (குறுவை கார் அல்லது சொர்ணவாரி பட்டங்களில்) சோதனைப் பாத்திகளில் நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த ரகம் ஏக்கருக்கு முறையே 2,700, 2,960, 2,540, 2,330, 1,920 கிலோ மகசூல் அளித்தது. மேலும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (குறுவை 1974) 5.55 ஏக்கர் அளவில் பயிரிட்டபோது, இந்த ரகம் சராசரியாக ஏக்கருக்கு 2,250 கிலோ மகசூல் அளித்தது. இதன் தாள்கள் நடுத்தர உயரமாகவும் சாயாமாலும் இருக்கும். தூர்கள் அதிகமாக இருப்பதுடன், ஒரே முகமாகப் பூக்கும் குணமுடையது. அரிசி நீண்ட சன்ன ரகத்தைச் சேர்ந்தது. அரிசி மணமுடையது. ஏக்கருக்கு சராசரியாக 2,500 கிலோ (மாவுக்கு 30 கலம்) மகசூல் அளிக்க வல்லது. இந்த நெல் ரகம் குறுவை, கார் அல்லது சொர்ணவாரி நவரை ஆகிய பட்டங்களுக்கு ஏற்றது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திரூர் குப்பத்தை உலகம் முழுவதும் புகழ் பெறச் செய்த 'டி. கே. எம். 6' நெல்லையும், 'டி.என். 1' என்ற நெல்லையும் ஒட்டுச்சேர்த்து அதன் பலனாக உண்டாகிய இரகம் டி. கே. எம். 8. பரிசோதனைக் காலத்தில் இதற்கு 'கல்சர் 1251' என்று பெயர் கொடுத்து பல முற்போக்கு விவசாயிகள் கழனிகளில் பயிர் செய்யப்பட்டது. சோதனைகளில் எல்லாம் பெரும்பாலும் ஏக்கருக்கு 2.5 டன்னுக்கு அதிகமான மகசூல் தந்துள்ளது இந்த இரகம். இதன் வயது சுமார் 120-125 நாட்கள். நாட்டு இரகங்களைப் போல் வளர்ந்து சாயாமல், 'ஐ. ஆர்.' இனத்தை போல குட்டையாகவும், செங்குத்தாகவும் வளரும் தன்மையுடை



யது இந்த இரகம். வளம் குறைந்த நிலங்களிலும் நல்ல மகசூல் தருகிறது. நெல்லைத் தாக்கும் பலபூச்சிகளில் குருத்துப் பூச்சி மிகவும் முக்கியமானது. குருத்துப் பூச்சியின் தாக்குதல் குறிப்பாக நவரைப் பட்டத்தில் மிகவும் அதிகம். 'டி. கே. எம்.8' ரகம் குருத்துப் பூச்சியின் தாக்குதலையும் ஓரளவுக்குத் தாங்கி நின்று, சேதம் அதிகம் இல்லாமல் வளருகிறது.

வடமாவட்டங்களில், அதிலும் குறிப்பாக செங்கை மாவட்டத்தில் சம்பா பட்டத்தில் பருவ மழையுடன் நெல்லை விதைத்து, பின்பு குளத்தில் தண்ணீர் வந்த பின் நீர் கட்டும் வழக்கம் பரவலாகப் பழக்கத்தில் உள்ளது. இவ்வாறு மானாவாரியாக நெல் விதைக்கப்படும் இடங்களிலும் 'டி. கே. எம். 8' ரகம்-தற்பொழுது பயிர் செய்யப்படும் 'பி. ஏ. எம். 3', 'கோ. 31' ஆகிய இரகங்களை விட-அதிக மகசூல் தருகிறது. எனவே, சம்பா பட்டத்தில் மானாவாரியாக நெல் பயிர் செய்யப்படும் பகுதிகளிலெல்லாம் 'டி. கே. எம் 8' ரக நெல்லைப் பயிரிடுவது சிறந்தது.

## குடுமியான்மலை-1 கம்பு

'குடுமியான்மலை-1' அல்லது 'கே. எம். 1' ரகக் கம்பு 85 நாளில் பலன் தரக்கூடியது. 'எம். எஸ். 5141' என்ற பெண் இனத்தையும், 'ஜே. 104' என்ற ஆண் இனத்தையும் சேர்ந்த ஒட்டுக் கம்பு இது. வீரிய ஒட்டு இரகக் கம்பு என்ற உடன், 'பசுங் கதிர் நோய்' வந்து விடுமே என்று நம் உழவர்கள் அஞ்சுகிறார்கள். ஏனெனில், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இந்த நோயினால் நம் உழவர்களுக்கு ஏற்பட்ட நட்டம் கொஞ்சமல்ல. இந்த நோயிலிருந்து விடுபட பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அவற்றின் விளைவாக பிறந்தவைதான் குடுமியான்மலை

கம்பு இரகங்கள். 'கே. எம். 1' ரகக் கம்பின் தாய், பசுங்கதிர் நோயை எதிர்க்கவல்ல நைஜீரியா தேசத்து கம்பின் பரம்பரையைச் சேர்ந்தது. 'கே.எம். 1' ரகக் கம்பின் தந்தையான 'ஜே. 104' வறட்சியைத் தாங்க வல்லது. எனவே 'கே. எம். 1' ரகக் கம்பு வறட்சியைத் தாங்கும் சக்தியையும், பசுங்கதிர் நோயை ஓரளவுக்கு எதிர்க்கும் சக்தியையும் கொண்டது. எல்லா பட்டங்களிலும் வளர்ந்து நல்ல மகசூல் தருகிறது. இந்த ரகத்தை இறவைப் பட்டத்திலும், மானாவாரிப் பட்டத்திலும் பயிர் செய்யலாம். பயிருக்கு இடும் உரத்தின் அளவை அதிகரித்தால் இது அதிக மகசூல் தருகிறது. நீளமாக உருண்டு திரண்டு கதிரும் நெருக்கமாக திரட்சியுள்ள மணி பிடிக்கும் திறனும் கொண்ட இந்த 'கே. எம். 1' இதுவரை பழக்கத்தில் இருந்த 'எச். பி.3 ரகத்தை விட அதிக மகசூல் தரவல்லது.

## குடுமியான்மலை-2 கம்பு

'கே. எம். 2' அல்லது குடுமியான்மலை-2 ரகக் கம்பு 'எம்.எஸ் 5141-எ' என்ற பெண் இனத்தையும், 'கே. 560-டி. 30' என்ற ஆண் இனத்தையும் ஒட்டுச் சேர்த்து உண்டாக்கப் பட்ட இரகமாகும். இதன் வயது 85 நாட்கள். தாயும், தந்தையும் பசுங்கதிர் நோயை எதிர்க்க வல்லவை. எனவே, பசுங்கதிர் நோய் 'கே. எம். 2' கம்பில் அநேகமாகத் தாக்குவதில்லை. இந்த இரகமும் எல்லா பட்டங்களுக்கும் ஏற்றது. மானாவாரியாகவும், இறவையாகவும் பயிர் செய்யலாம். கதிரில் மணி நெருக்கமாகப் பிடிக்கிறது. மணியும் திரட்சியாக இருக்கிறது. பசுங்கதிர் நோயைத் தவிர கதிரைத் தாக்கும் 'குருத்து ஈ' போன்ற பூச்சிகளையும் எதிர்க்கும் சக்தி கொண்டது இந்த இரகம். இந்த இரகம் 'எச். பி. 4' ரகத்தைவிடச் சிறந்தது.

## புதிய புடல்

சிறு தானியங்கள், பயறு வகைகள், காய்கறிகள் இவற்றின் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள குடுமியான்மலை ஆராய்ச்சி நிலையம் 'கே.எம்.1' அல்லது 'குடுமியான்மலை-1 புடலை' ரகத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இரகத்தின் காய்கள் மிகவும் நீளமாக இருக்கின்றன. சதைப் பற்றும் அதிகம். காய் உருண்டையாக இருக்கின்றது. ஒவ்வொரு கொடியிலும் 20 முதல் 35 காய்கள் வரை காய்க்கின்றன. ஆடிப்பட்டத்தில் பயிரிடலாம். இந்தப் புடலின் வயது 120 நாட்கள். நெல்லை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்புடல் இரகம் இலைப்புள்ளி நோய்க்கும், காய்களைத் தாக்கும் ஈக்களுக்கும் இரையாவதில்லை. இவற்றை எதிர்க்கும் சக்தி இந்த இரகத்திற்கு உள்ளது. காய்கள் நீண்டு வளருவதால் இதற்கு பந்தல் 2 மீட்டர் உயரத்தில் அமைப்பது நல்லது.

## புதிய கரும்பு ரகம்

கடலூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் 'கோ. க. 67-1' என்ற ஒரு புதிய கரும்பு இரகத்தை கண்டு பிடித்துள்ளது. இப்புதிய ரகம் 330-லிருந்து 360 நாட்களில் மகசூல் தரும். இந்த இரகம் டிசம்பர்-ஜனவரி பட்டத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. தற்பொழுது சாகுபடியில் உள்ள 'கோ. 658' இரகத்தை விட இப்புதிய ரகம் சராசரியாக 8 டன் அதிக மகசூல் தரவல்லது. இதில் சர்க்கரைச் சத்தும் அதிகம் இருக்கிறது. எனவே, உழவர் பெருமக்களுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் இந்த இரகம், ஏற்றதாகும். எல்லா மாவட்டங்களிலும் நன்றாக வளர்ந்து மகசூல் தருகிறது. தற்பொழுது கடலூரைச் சுற்றி சில இடங்களில் காணப்படும் செவ்வழுகல் நோயை ஓரளவுக்கு எதிர்க்கும் சக்தி கொண்டது இந்த இரகம். உயரமாகவும், வீரியமாகவும் வளரும் தன்மையும், தோகை அதிகம் கட்டும் திறனும் உள்ள இந்த இரகம், பச்சை கலந்த செங்கருப்பு நிறமாக இருக்கும். 'கோ. 658' சாகுபடியில் உள்ள பகுதிகளுக்கும், அதிலும் குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் இந்த 'கோ. க. 67-1' என்ற புதிய இரகம் மிகவும் ஏற்றதாகும்.

## வேண்டுகோள்

அதிக மகசூல் பெற்று அதன் மூலம் அதிக இலாபம் பெற விரும்பும் உழவர்கள் அனைவரையும், மேற்கூறிய ரகங்களைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

# பெருகிவரும் புத்தக வங்கிகள்




மத்தியப் பிரதேச மாநிலத்தில் பள்ளிகளுக்காக அமைக்கப்பட்ட புத்தக வங்கிகளின் எண்ணிக்கை 51 ஆயிரத்தைத் தாண்டி விட்டது. அந்த மாநிலத்தில் ஏறக்குறைய 58 ஆயிரம் பள்ளிகள் உள்ளன. மத்தியப் பிரதேசத்தைப் போலவே, கேரள மாநிலத்திலும், சராசரி ஒரு பள்ளிக்கு ஒரு புத்தக வங்கி இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் 11 ஆயிரம் பள்ளிகள் உள்ள கேரள மாநிலத்தில் உள்ள புத்தக வங்கிகளின் எண்ணிக்கை 11,183 ஆகும்.

மற்ற மாநிலங்களும், தங்கள் பகுதிகளிலுள்ள பள்ளிகளில் இத்தகைய புத்தக வங்கிகளை நிறுவியுள்ளன. அரியானா மாநிலத்தில் 4,200 புத்தக வங்கிகளும், ராஜஸ்தான் மாநிலத்தில் 1,900 புத்தக வங்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கல்லூரிகளில் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டு மடங்காகப் பெருகியிருக்கிறது. 1975 ஜூலை முதல் தேதியிலிருந்து 1976 மார்ச் தேதி வரை ஏறக்குறைய 900 புத்தக வங்கிகள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் மொத்தம் 851 புத்தக வங்கிகளே இருந்தன.

நலிவடைந்த பிரிவைச்சேர்ந்த மாணவர்கள், கல்வி பயிலும் காலத்தில் அவர்களுக்குத் தேவையான புத்தகங்களைக் கடனாகக் கிடைக்கச் செய்யும் வகையில் புத்தக வங்கிகளை நிறுவுவதில், பல்கலைக் கழக மானியக் குழு கல்லூரிகளுக்கு உதவி வருகிறது.

பிரதமரின் இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒரு புத்தக வங்கி அமைக்கத் தேவையான மாணவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையில் உள்ள நிபந்தனையை, பல்கலைக் கழக மானியக் குழு தளர்த்தியுள்ளது. இதன் மூலம் அதிக அளவு மாணவர்கள், புத்தக வங்கியின் உதவியைப் பெறுகிறார்கள்.

மாணவர் அரங்க



# தாய்நாடும் நீங்களும்



பொதுவாக நமது நாட்டு மாணவர்கள் வேற்றுநாடுகளில் உள்ள அதிசயங்களையும் இயற்கை வளங்களையும் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நமது தாய்நாட்டின் பெருமையையும் இங்கே உள்ள சிறப்பம்சங்களையும் தெரிந்து கொள்கிறார்களா என்றால் அது சந்தேகத்துக்குரியதுதான்.

நமது இந்திய நாட்டின் சிறப்புகள் குறித்து இங்கே 20 வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய விடை உங்களுக்குத் தெரிகிறதா பாருங்கள். எல்லாவற்றிற்கும் சரியான விடையளித்து விட்டால் நீங்கள் தாய்நாட்டைக் கனவிலும் மறவாதவர் என்று பெருமைப்படலாம்.



## வினாக்கள்?

### இந்தியாவில்...

1. உயரமான மலை எது?
2. பெரிய நகரம் எது?
3. பெரிய சிலை எது?
4. பெரிய மிருகக்காட்சி சாலை எது?
5. நீளமான பிளாட்பாரம் எது?
6. நீளமான குகைப்பாதை எது?
7. நீளமான பிரகாரம் எது?
8. அதிக மக்கள் தொகையுள்ள மாநிலம் எது?
9. பரப்பளவில் பெரிய மாநிலம் எது?
10. கரும்பு அதிக அளவில் பயிரிடப்பெறும் மாநிலம் எது?
11. நீளமான டெல்டாப் பகுதி எது?
12. உயரமான அணை எது?
13. உயரமான கோபுரம் எது?
14. பெரிய ஏரி எது?
15. நீளமான சாலை எது?
16. பெரிய மசூதி எது?
17. மிக உயரமான அருவி எது?
18. பெரிய காடுகள் உள்ள மாநிலம் எது?
19. பெரிய குகைக் கோயில் எது?
20. அதிக அளவு மழை பெய்யும் பகுதி எது?

(விடைகள்: பக்கம் 48 பார்க்க)

—தொகுப்பு: எஸ். எஸ்.

# கடன் சுமையைக் குறைக்க

# மூன்று அவசரச் சட்டங்கள்!



தமிழ்நாட்டில் கடன்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயிகள் அல்லாத மற்றும் சிலருக்கும் தற்காலிகக் கடன் நிவாரணம் வழங்கும் காலத்தை மேலும் ஓராண்டுக் காலம் நீடித்து தமிழக ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் 4—3—76 அன்று பின்கண்ட மூன்று அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தார்.

**1. தமிழ்நாடு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரண) எண். 2 அவசரச் சட்டம், 1976:**

விவசாயிகளிடமிருந்து கடன் வசூலிப்பதை மேலும் ஓராண்டு ஒத்தி வைக்க இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது. இந்த அவசரச் சட்டம் 1976 ஜனவரி 15-ஆம் தேதியிலிருந்தே அமலுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படும். விவசாயிகளிடமிருந்து கடன் பாக்கி வசூலுக்காக எவரும் 'சிவில் கோர்ட்' அல்லது 'ரெவின்யூ கோர்ட்டில்' வழக்குத் தொடர்வதை இச்சட்டம் தடுக்கிறது.

இந்த அவசரச் சட்டத்தின்படி, விவசாய நிலத்தில் அக்கறையுடைய நபர், இத்தகைய அக்கறை காரணமாக இத்தகைய நிலத்தை வைத்திருப்பவர் அல்லது வாரம் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் ஆகியோர் 'விவசாயி' என்று கருதப்படுவர். குத்தகைதாரரும் இச்சொல்லில் அடக்கமாவார் என்றும் அச்சட்டம் கூறுகிறது.

1971—72, 1972—73, 1973—74, 1974—75-ஆம் ஆண்டுகளில் எந்த ஆண்டிலாவது வருமான வரிச் சட்டத்தின் கீழ், வருமான வரி விதிப்புக்குட்பட்டவர் அல்லது தமிழ்நாடு விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழ் விவசாய வருமான வரி விதிப்புக்குட்பட்டவர் அல்லது விற்பனை வரி அல்லது விற்பனை வரிக்குட்பட்டவர்கள் இந்தச் சொல்லின் விளக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கூட்டு நிறுவனங்கள் (பார்ட்னர்ஷிப் நிறுவனங்கள்), கம்பெனிகள், பார்லிமெண்ட் இயற்றிய சட்டத்தின்படியோ, அல்லது வேறு தனிச் சட்டத்தின்படியோ அமைக்கப்பட்ட கார்போரேஷன்களும் இந்தச் சொல்லின் இலக்கணத்தில் சேர்க்கப்படவில்லை.

பிரிவினையாகாத இந்து குடும்பம் ஒன்று விவசாயத்தில் ஈடுபட்டிருந்தால் அந்தக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு விவசாயியாகக் கருதப்படுவர்.

'விவசாய நிலம்' என்பது விவசாயத்திற்காக அல்லது தோட்டங்களுக்காக உபயோகிக்கப்படும் நிலம் என்று பொருளாகும். குடியிருப்புக் கட்டடத்தை ஒட்டியுள்ள நிலம், விவசாய நிலமாகக் கருதப்பட மாட்டாது,

ஓராண்டுக் காலம் முடியும் வரை கடன் வசூல் தொடர்பாக நீதி மன்றங்களில் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும். அவசரச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற மாநில அரசு விதிகளை இயற்றலாம்.

மாநில அரசுகள் அல்லது உள்ளாட்சித் துறை கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், சட்ட பூர்வ நிறுவனங்கள் போன்ற அமைப்பு

> *"கிராமங்களில் கடன் வசதியைப் பெருக்கவும், சிறு விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டங்களை வகுக்கவும் பிரத்தியேக முயற்சி செய்திருக்கிறோம்."*
>
> —இந்திரா காந்தி

# எது வந்தாலும் சரி, பாதுகாப்பான வருங்காலத்தை எந்த அன்புத் தந்தையும் தம் மனைவி மக்களுக்குத் தட்டாமல் தந்திட 5 வழிகள்.

எல்ஐஸியின்
'உன்னதமான பாதுகாப்பு'
பாலிஸியில் (பல நோக்கப்
பாலிஸியில்) உள்ளன.



**இந்தப் பாலிஸி எப்படி வேலை செய்கிறது.**
30வது வயதிலே நீங்கள் 20,000 ரூபாய்க்கு ஒரு 25–ஆண்டுப் பாலிஸி எடுப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் செலுத்த வேண்டிய தொகை மாதம் ரூ. 83.40 தான். தேர்ந்தெடுத்த கால வரம்புக்குள் நீங்கள் மரணமடைய நேரிட்டால், உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கப் பெறும் தொகைகளாவன:





- மருத்துவம் போன்ற செலவுகளுக்கென உடனுக்குடன் ரொக்கப் பணம்.
- ஈடுகட்டும் வருமானமாக, முதல் 24 மாதங்களுக்கு ரூ. 400. அதன் பிறகு, பாலிஸிக் கால இறுதி வரை மாதாமாதம் ரூ. 200.
- பாலிஸிக் கால முடிவிலே, (பல ஆயிரம் ரூபாய்கள் பெறக்கூடிய) போனசுகளுடன் ரூ. 18,000.

**ஓய்வுக் காலத்தில் வருவாய்**

பாலிஸிக் காலத்தைத் தாண்டி உயிர் பிழைத்திருந்தீர்களானால், போனசு சேர்ந்த முழு மொத்தத் தொகையையும் நீங்கள் பெறலாம், அல்லது குறிப்பிட்ட கால அளவுக்கோ, வாழ்நாள் முழுதுமோ ஒழுங்கான வருவாயினை வருடம் தவறாமல் உறுதியாகப் பெற்றுவரலாம்



நீங்கள் பணிபுரியுமிடத்திலே சம்பளச் சேமிப்புத் திட்டத்தின் மூலமாக எவ்வித எல்ஐஸி பாலிஸியையும் நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். உங்கள் சார்பாக பிரீமியங்களைச் செலுத்திவரும் பொறுப்பு உங்கள் எசமானருக்கு உண்டு; இந்தப் பிரீமியங்கள் வழக்கமான மாதாந்தரப் பிரீமியங்களை விடக் குறைவானவையே.

- உங்கள் குழந்தைகளின் பள்ளி, கல்லூரிப் படிப்புக்கென உதவுபடியான நன்மைகள்
- ...திருமணம், வாழ்வின் துவக்கம் ஆகியவற்றுக்கான உதவிகள்.



**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா.**

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் போல் ஆதரவு தருவது எதுவுமில்லை.**

dCA/LIC/5A TAM

களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

**2. தமிழ்நாடு கடன்பட்டோர் (தற்காலிக நிவாரண) எண். 2 அவசரச் சட்டம், 1976:**

இந்தச் சட்டம் எந்த நபரிடமிருந்தும் கடனை வசூலிப்பதற்காக நீதிமன்றத்திற்கு சென்று வழக்குத் தொடர்வதை ஓராண்டு காலத்திற்குத் தடை செய்கிறது. இந்த அவசரச் சட்டமும் ஜனவரி 15-ஆம் தேதி முதல் ஓராண்டுக்கு அமலில் இருக்கும்.

1974 மார்ச் 31-ஆம் தேதி, 1975 மார்ச் 31-ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டுகளில் வருமான வரி விதிப்புக்குட்பட்டவர்களுக்கும் இந்த ஆண்டுகளில் விற்பனை வரி அல்லது மத்திய விற்பனை வரிக்குட்பட்டவர்களுக்கும் இது பொருந்தாது. கட்டடங்கள் அல்லது விவசாய நிலமல்லாத நிலங்கள் தொடர்பாக சொத்து வரி அல்லது வீட்டு வரிக்குட்பட்டவர்களுக்கும் இது பொருந்தாது. ஆனால் கட்டடங்கள் அல்லது நிலங்கள் வாடகைக்கு விடப்பட்டிருந்தாலோ அல்லது சொந்தக்காரரின் வசம் இருந்தாலோ இதன் ஆண்டு வாடகை மதிப்பு ரூபாய் 2,400-க்கும் குறையாமல் இருந்தால்தான் இவர்களுக்கு இந்த நிவாரணம் பொருந்தாது.

**3. தமிழ்நாடு கடன்பட்ட விவசாயிகள் மற்றும் கடன்பட்டோர் (சிறப்பு ஏற்பாடு) எண். 2 அவசரச் சட்டம், 1976:**

இச்சட்டம் 1975 ஜூலை 22-ஆம் தேதி கொடுக்கப்பட வேண்டிய கடன் விஷயத்தில் 1975 ஜூன் 22-ஆம் தேதிக்கும் 1976 ஜனவரி 15-ஆம் தேதிக்குமிடையேயான காலத்திற்கு வட்டி எதுவும் கிடையாது என்று கூறுகிறது. ஆனால் 1975 ஜூலை 22-ஆம் தேதிக்குப் பின் வாங்கிய கடனுக்கு வட்டி வசூலிக்கலாம்.

தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தையும் இச்சட்டம் திருத்துகிறது. 1975 ஜூலை 22-ஆம் தேதியில் திருப்பித் தர வேண்டிய கடனுக்கு 1975 ஜூலை 22-ஆம் தேதியிலிருந்து 1976 ஜனவரி 15-ஆம் தேதி வரையிலான கடனுக்கு வட்டி ஏதும் இல்லை. 1975 ஜூன் 22-ஆம் தேதிக்குப் பிறகு வாங்கிய கடனுக்கு வட்டி உண்டு என்கிற வகையில் இச்சட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

அடகு வைக்கப்பட்ட எந்தப் பொருளையும் 1975 ஜூலை 22-ஆம் தேதியிலிருந்து 1977 ஜனவரி 15-ஆம் தேதி முடிவடையும் காலத்தில் அடகுக் கடைக்காரர்கள் எந்த வகையிலும் விற்கக்கூடாது என்றும் இச்சட்டம் கூறுகிறது.

இந்த மூன்று அவசரச் சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக கடன்பட்ட விவசாயிகளுக்கும் விவசாயிகளல்லாத மற்றவர்களுக்கும் ஓராண்டு கால தற்காலிக கடன் நிவாரணம் கிடைத்துள்ளது. இக்காலத்தில் அவர்கள், பருவம் வாய்ப்பாக உள்ள நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு கடுமையாக உழைத்து, விரைவில் அதிக வருவாய் பெற்று, கடனைத் தீர்த்துக் கொள்வதற்கு வழி பிறந்துள்ளது. இவ்வழியைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவது கடன்பட்டோர்களின் கடமையாகும்.




தமிழ்நாட்டில் குந்தா நீர் மின் திட்டத்தின் 4-வது கட்ட அமைப்புக்காக கனடா மேலும் 3.5 இலட்சம் கனடா டாலர்களை (31 இலட்சம் ரூபாய்) மானியமாக வழங்கியுள்ளது. ஏற்கெனவே, அந்நாடு 1973 ஆகஸ்டில் கடனாக 39 இலட்சத்து 72 ஆயிரம் கனடா டாலர்களையும் (ரூ. 2.78 கோடி) மானியமாக 12 இலட்சம் கனடா டாலர்களையும் (ரூ. 84 லட்சம்) வழங்கியுள்ளது.

இந்தியாவின் சார்பில் மத்திய நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறை கூட்டுச் செயலாளர் திரு. ஜே. எஸ். பெய்ஜலும், கனடா நாட்டின் சார்பில் இந்தியாவுக்கான அந்நாட்டு ஹை கமிஷனர் திரு. ஜே. ஆர். மேபியும் இப்புதிய மானியம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

குந்தா நீர் மின் திட்டத்தின் 4-வது கட்ட அமைப்புக்கு கனடா நாட்டு பொறியாளர்கள் அளிக்கும் சேவை, சிறப்புக் கருவிகள் வழங்கல் ஆகியவற்றிற்காக இந்த மானியம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்கான கருவிகளையும், உதிரி உறுப்புகளையும் வழங்கி அவற்றை நிறுவி, திட்டத்தைத் துவக்கி வைப்பதற்காக கனடா பொது மின் சாரக் கம்பெனி, தமிழ்நாடு மின் வாரியத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி தற்போது கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் முடிவடைந்தவுடன், தமிழக மின் உற்பத்தி மேலும் பெருகும்.

# குடியரசுத் தலைவர் ஆட்சியின் பயன்கள்




தமிழ்நாட்டில் விலைவாசிகள் விரைந்து குறைகின்றன!



"என்கடனைத் தீர்க்க நீ, ஆயுள் முழுவதும் அடிமை வேலை செய்ய வேண்டும்"



கொத்தடிமைக் கொடுமை இனி யில்லை!





17 தொழிற்சாலைகளில் நிலவிய தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. 24,000 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.


1977 ஜனவரி 15-ந்தேதி வரை கடனை
வசூலிக்க தடை !


தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில்
பங்கு அளிப்பதற்காக, ஒவ்வொரு
தொழிற்சாலையிலும் கூட்டுக் கவுன்
சில் அமைக்கப்பட்டு வருகிறது.


பேச்சைக் குறையுங்கள் !
உற்பத்தியைப் பெருக்குங்கள் !!



# தூய்மை காக்க வாரீர்!

''நரகம் என்பது பெரும்பாலும் இலண்டனைப் போல இருக்கும்''—(Hell is a city much like London) என்றான் ஆங்கிலப் பெரும் புலவன் டென்னிசன். இந்தக் கூற்று, இலண்டன் மாநகரத்திற்கு மட்டுமல்ல—ஏறத்தாழ எல்லாப் பெரு நகரங்களுக்குமே பொருந்துவதாகும்.

மேலே குறிப்பிட்ட இந்தப் பொது விதிக்குச் 'சிங்காரச் சென்னை' மட்டும் முழுக்க முழுக்க விதிவிலக்கா என்ன? பொதுவாகவே, நகரின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என்று கருதிச் செயல்படுபவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். நகரின் தூய்மை—நகரின் சுகாதாரம்—பேணிப் பாதுகாக்கப்படுமானால் மக்களுக்கு நோயற்ற—ஆரோக்கிய வாழ்வை அளிக்க முடியும்.

இவ்வாறு, நகரை அழகுபடுத்தி, தூய்மைப்படுத்தும் நல்லதோர் இயக்கத்தை பெங்களூரில் ஆரம்பித்து மிக வெற்றிகரமாக நடத்தி முடித்து, இப்போது நிரந்தரமாகச் சென்னைக்கு வந்துள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், தொடர்ந்து சென்னை நகரில் அவ்வியக்கத்தை ஆரம்பித்து நடத்தத் திட்டமிட்டார். அதற்காக 8-அம்சத் திட்டமொன்றினை தயாரித்து பிப்ரவரி முதல் நாள் சென்னை கோகலே மண்டபத்தில் பத்திரிகையாளர்களைக் கூட்டி, அவர்கள் மத்தியில் தமது திட்டத்தை விளக்கினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது...

''கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரம் இந்தியாவிலேயே சுத்தமான நகரமாகவும், அழகான நகரங்களில் ஒன்றாகவும் திகழ்ந்தது.

''துரதிருஷ்டவசமாக இப்போது சென்னை நகரின் தெருக்கள் அசுத்தம் அடைந்து நகரின் அழகு கெட்டுப் போய்க்கொண்டு இருக்கிறது.

''மீண்டும் சென்னை நகரை மிகவும் அழகு வாய்ந்த நகராக மாற்றுவதற்கு இங்கு வசிக்கின்ற எல்லா மக்களும் தம்மால் இயன்ற அளவு முன்வர வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் தங்களது வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டால், அதுவே நகருக்கு அழகு தரும் விதத்தில் அமையும்.

''கர்நாடக (மைசூர்) மாநில ஆளுநராக நான் இருந்தபோது அந்த நகரைச் சுத்தமாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ''துப்புரவு இயக்கம்'' ஒன்றைத் தொடங்கி நடத்தினேன். அதற்கு அங்குள்ள மக்கள் எல்லாரும் மிகவும் ஒத்துழைப்புத் தந்தார்கள்.

''அதே போன்ற ''துப்புரவு இயக்கம்'' ஒன்றைச் சென்னையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

''துப்புரவு இயக்கத்தில் சேர விரும்புபவர்கள், தாங்களாகவே முன்வந்து அந்தந்த வட்டங்களில் ஒரு குழுவை அமைத்து அவர்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

''அப்படி அமைக்கப்படும் குழுவில் உள்ள உறுப்பினர் பட்டியல் ''துப்புரவு இயக்க'' அமைப்பாளருக்கு அனுப்பப்படும்.

''துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணி முதல் 10 மணி வரை அந்தந்த வட்டத்தில் உள்ள எல்லாத் தெருக்களையும், அங்காடிகளையும் சுற்றிப்பார்த்து,

எங்கெங்கு அசுத்தம் காணப்படுகிறதோ அவற்றையெல்லாம் அகற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

''அதே போல சினிமாக் கொட்டகைகளுக்கு உள்ளே உள்ள கழிப்பிடங்களையும் பார்வையிடுவார்கள்.

''ஓட்டல்களில் பரிமாறப்படும் உணவு வகைகளும், மற்ற பொருள்களும் சுத்தமாகவும் தரமானதாகவும் இருக்கின்றனவா? என்றும் அவர்கள் கண்காணிப்பார்கள்.

''ஒவ்வொரு வட்டமும் துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் சுற்றிப் பார்க்கப்பட்ட பிறகு, குழு உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, அறிக்கை தயாரிப்பார்கள்.

''பிறகு அந்த அறிக்கை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அதிகாரிகள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும் இந்த இயக்கம் தூண்டுகோலாக இருக்கும்; சிறிது காலம் கழித்து துப்புரவு இயக்கத்திற்கு ''மத்திய குழு'' அமைப்பதற்கான நடவடிக்கை பற்றி யோசிக்கப்படும். அந்த மத்திய குழு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறைந்த பட்சம் ஒரு வட்டத்தையாவது சென்று பார்வையிடும்.

''இந்த இயக்கத்தில் சேர்ந்து கொள்பவர்களுக்குத் தனி அடையாள வில்லைகள் கொடுக்கப்படும்.

''இந்த இயக்கத்துக்குத் தலைவர் கிடையாது. அமைப்பாளராக இருந்து நான் செயல்படுவேன்; இதில் எந்தவிதக் கட்சி வேறுபாடும் கிடையாது.

''சென்னை நகரை அழகுபடுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது.

''கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சென்னையில் வசித்து வருபவன் என்பதாலும், சென்னையை அழகு மிக்க நகரங்களில் ஒன்றாக உருவாக்க வேண்டும் என்ற ஆவலின் காரணமாகவும், இந்திய ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் நான் சமூகப் பணியில் ஈடுபட ஆர்வத்துடன் முன் வந்துள்ளேன்.

''இந்த முயற்சிக்குச் சென்னையில் வாழும் பொது மக்கள் எல்



லாரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அழகுபடுத்தும் இயக்கத்தை ஆளுநர் தொடங்கி வைத்தார்.

திரு. வி. வி. கிரி அவர்கள் ஆரம்பித்துள்ள சென்னை நகரைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் இயக்கத்தின் தொடக்க விழா, பிப்ரவரி 6-ஆம் நாள் மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் இந்த இயக்கத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''சென்னை மாநகரைத் தூய்மையாகவும், சுகாதாரமாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ளத் தீவிரக் கண்காணிப்பும் துரித நடவடிக்கையும் மேற்கொள்ளத் தக்க முனைப்புடன் செயல்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

ஆளுநர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், ''வெறும் நிர்வாக உத்தரவுகளினால் மட்டும் நாம் இந்த இலட்சியத்தை நிறைவேற்றிட முடியாது; 'லைசென்ஸ்' இல்லாத மாட்டுத் தொழுவங்கள் வைத்திருப்பது, நகரை அசுத்தப்படுத்துவது, ஆக்கிரமிப்புகள் செய்வது, கலப்படம் ஆகிய குற்றங்களுக்காக ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் வழக்குகளை மாநகராட்சி தொடர்கிறது. நீதிமன்றத்தில் இவற்றிற்குத் தீர்வு காணப் பல மாதங்கள் ஆகின்றன. மேலும், இத்தகைய குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தண்டனை மிகச் சொற்பமான அபராதத் தொகையாகவே உள்ளது; எனவே, எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை. ஆதலின், நடமாடும் நீதிமன்றம், சுகாதாரப் பாதுகாப்புப் படை ஆகியன ஏற்படுத்தலாம் என்கிற மாநகராட்சியின் யோசனை பாராட்டுக்குரியதாகும்.

''நகரின் தூய்மையைக் கெடுப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும். மற்ற மாநகரங்களுடன் ஒப்பிடும் போது இப்போதும் சென்னை நகரம் சுத்தமாகவும் அழகாகவும் தான் உள்ளது. இருந்தாலும் எவ்வளவு தொகை செலவிட்டாலும் அதைத் தூய்மையாக வைத்துக் கொள்வோம் என்பது உறுதியில்லை. பெருந்தொகை செலவிடப்பட்டு, கூவம் சீரமைக்கப்பட்டு அழகுறக் கரைகள் அமைக்கப்பட்ட பிறகும், கூவம் இன்னமும் அசுத்தப்படுத்தப்படுகிறதே! குடிசைகள் சுத்தமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரக் கேடாக உள்ளது.

''சென்னை நகரிலிருந்து தொலைவில் வெளி இடத்திற்குக் கறவை மாடுகளையும் மாட்டுத் தொழுவங்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்ற யோசனையை நான் வரவேற்கிறேன். சுற்றித் திரியும் கால் நடைகளால் ஏற்படும் சாலைவிபத்துக்கள் தவிர்ப்பு, சுகாதார மேம்பாடு ஆகியன கருதி இந்த ஏற்பாடு மிகவும் அவசியமானதேயாகும்'' என்றார்.

இந்தத் தொடக்க விழாவில் ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டார்.

நகரை அழகுபடுத்தித் தூய்மைப்படுத்திச் சுகாதார நலன் பேணும்நோக்கத்தோடு, சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. டி. வி. அந்தோணி, ஆளுநர் அவர்களுக்குச் சில திட்டங்களையும் ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் விளக்கி ஒரு குறிப்பு அனுப்பியுள்ளார்.

ஞாயிற்றுக் கிழமை தோறும் துப்புரவு இயக்கத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் காலை 8 மணி முதல் 10 10 மணி வரை பல்வேறு பகுதிகளிலும் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுகின்றனர். அசுத்தமே நோய்களுக்கெல்லாம் காரணம் என்பதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டுள்ள இவ்வியக்கத்திற்கு நகர மக்கள் அனைவரும் தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் தந்து ஒத்துழைப்பு நல்கிச் சென்னை மாநகரின் தூய்மையையும், அழகையும் காத்திட முயற்சிப்பது நமக்கு நாமே செய்துகொள்ளும் நற்பணியாகும்!

# வெற்றியை நோக்கி....!



எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

## மத்திய அரசுத் தொழில் திட்டம்-11



# நெய்வேலி அனல் மின்நிலையம்

வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நிலை நிறுத்துவதற்கும், மின் உற்பத்தித் துறை மற்றும் போக்குவரத்துத் துறையிலும் கணிசமான அளவு முதலீடு செய்வது அவசியமாகிறது.

மின் உற்பத்தித் துறையின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியைவிட அதிகமாக இருத்தல் அவசியம் என்ற கருத்து தற்சமயம் பரவலாக ஒப்புக்கொண்ட ஒன்றாகும். இந்த அடிப்படையில்தான் இந்திய அரசு எப்பொழுதும் மின் உற்பத்திக்கும், அதன் விநியோகத் திட்டங்களுக்கும் முதலிடம் அளித்து வருகிறது.

நீண்டகாலமாகத் தமிழ்நாடு நீர் மின்சார நிலையங்களின் மூலமே மின் உற்பத்தி செய்து வந்தது. சுதந்தரத்திற்கு முன்னரே, பெரும்பான்மையான நீர் மின்சார உற்பத்தி பயன்படத் தொடங்கி விட்டது. மீதமுள்ளவை சுதந்தரத்திற்குப் பின்னர் பயன்படத் தொடங்கியது. சுதந்தரத்திற்குப் பின்னர் போடப்பட்ட திட்டங்கள் மூலம் விரிவு படுத்தப்பட்ட வேளாண்மைத் துறையும், தொழில் துறையும் மின்சாரத் தேவையை அதிகப் படுத்தியுள்ளன. வேளாண்மைக்குப் பூமிக்கு அடியிலுள்ள நீரைப் பயன்படுத்துதல், சிறிய நடுத்தர தொழில்களின் வளர்ச்சி, நிறைய மின் சக்தி தேவைப்படும் அலுமினியம், உர, இரசாயனத் தொழிற்சாலைகள் முதலியவை, தமிழ் நாட்டில் நீர் மின் உற்பத்தியின் பற்றாக்குறையை வெளிப் படுத்தின.

அடிப்படைத் தேவைக்கு வேண்டிய மின் அளவு கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. மேலும் கோடைக் காலத்தில் மின்சாரத் தேவை மற்ற காலங்களைவிட அதிகமாகியிருக்கிறது. அச்சமயத்தில், நீர் மின்சார உற்பத்தியும் குறைகிறது. எனவே, கோடைக் காலத்தில் விவசாய, தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தடைபடுகின்றன. எனவே, மத்திய அரசும், மாநில அரசும் தமிழ்நாட்டில் நீர்மின் உற்பத்தியைக் குறையாத வண்ணம் பாதுகாப்பதும், அனல் மின்சாரத்தைத் துணையாகக் கொள்வதும் அவசியமென உணர்ந்துள்ளன. இதற்குச் சிறந்த வழி, தமிழ்நாட்டில் கிடைக்கும் எரி பொருளாகிய பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்துவதுதான்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஒருங்கிணைந்த தொழில் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. அதில் அனல் மின் நிலையமும் ஒரு அங்கமாகும். நெய்வேலி அனல் மின் நிலையம், ஆசியாவிலேயே பழுப்பு நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்தும் ஒரே அனல் மின் நிலையமாகும். அது சோவியத் நாட்டில்பொருளாதார, தொழில் நுணுக்க உதவியுடன் அமைக்கப் பட்டது. சோவியத் நிறுவனங்களின் மேதைத் தன்மை, முழு ஈடுபாடு ஆகியவை இந்த மின் நிலையம் அமையக் காரணமாக அமைந்தன.

நெய்வேலி அனல் மின் நிலையம் 1962-லிருந்து மூன்று கட்டங்களில்—முதலில் 250 மெகாவாட், பிறகு 400 மெகாவாட், கடைசியாக அதாவது 1970-ல் 600 மெகாவாட்டாக உருப்பெற்றது. இது இந்தியாவிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையம்.

தமிழ்நாடு ஆண்டுதோறும் மின்சாரப் பற்றாக்குறையால் சிரமப்படும்போது முக்கியமாகத் தொழில், வேளாண்மைப் பணிகளுக்காகக் கோடைக் காலங்களில் அதிக மின்சாரம் தேவைப் படும்போது, நெய்வேலி அனல்

மின் நிலையம் மிகவும் உதவியுள்ளது. தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை நிறைவேற்றுவதில் நெய்வேலியின் முக்கியத்துவம் தெளிவாகிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் மொத்த மின் சக்தியின் நெய்வேலி நிலையத்தின் பங்கு 25 சதவிகிதமாகும். இது, கோடைக் காலங்களில் 36 சதவிகிதம் அளவுக்கு உயருகிறது.

தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட மொத்த மின்சார அளவு 1973—74-ல் 6,960 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலி தமிழ்நாட்டிற்கு அளித்த மின்சாரத்தின் அளவு 1,800 மில்லியன் யூனிட்டுகளாகும். தமிழ்நாட்டில் 1974—75-ல் பயன்படுத்தப்பட்ட மொத்த மின்சார அளவு 7,635 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலி தமிழ்நாட்டிற்கு அளித்த மின்சாரத்தின் அளவு 1,788 மில்லியன் யூனிட்டுகளாகும்.

1975—76-ல் தமிழ்நாட்டில் உபயோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் மொத்த மின்சார அளவு 7,725 மில்லியன் யூனிட்டுகள். அதில் நெய்வேலியின் பங்கு 1,980 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, கோடை மாதங்களான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நெய்வேலி வழங்கிய மின்சாரத்தின் அளவுகளாவன :

போதுமான பழுப்பு நிலக்கரி கிடைக்காமையால், அனல் மின் நிலையத்தின் எல்லா யூனிட்டுகளையும் பயன்படுத்திக் கொள்ள இயலாத நிலை உள்ளது. நெய்வேலியில் இயங்கும் அனல் மின் நிலையம் உட்பட எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைப் பெறும்பொருட்டு, இந்திய அரசு 87 கோடி ரூபாய் மதிப்பிற்குப் புதிய மூலதனம் வழங்கியுள்ளது. எதிர் பார்க்கின்றவாறு இப்புதிய திட்டம் வெற்றியடைந்துவிட்டால், 1979—80-லிருந்து தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றிற்கு, 3,500 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வழங்க முடியும். இது தமிழ்நாட்டின் மின்சார உற்பத்தி நிலைமையில் ஒரு நிலையான தன்மையை ஏற்படுத்தும்.

ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளது போல், சோவியத் நாட்டினரால் அமைக்கப்பட்டுள்ள இம் மின் நிலையம் மிகச் சிறந்த இயந்திரச் சாதனங்களைக் கொண்டுள்ளது.

| ஆண்டு | | நெய்வேலி வழங்கிய மின்சார அளவு | தமிழ்நாட்டில் அதே காலத்தில் பயன் படுத்தப்பட்ட மின் சாரத்தில், நெய்வேலி வழங்கிய மின்சாரத்தின் அளவு |
|---|---|---|---|
| 1973—74 | ... | 629 மில்லியன் யூனிட்டுகள் | 36.2 சதம் |
| 1974—75 | ... | 541 ,, ,, | 30.5 சதம் |
| 1975—76 | ... | 526 ,, ,, | 32.7 சதம் |

வெற்றிகரமாக இத் தொழிற்சாலை இயங்க சிறந்த சாதனங்கள் மட்டும் போதாது; இந்த அனல் மின் நிலையத்தை இயக்குபவர்களும், பராமரிப்பவர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத்தில் நுட்பமான அறிவு வாய்ந்த பொறியாளர்கள் உள்ளனர். ஹர்த்வார்கஞ்ச், ஒப்ரா, எண்ணூர் ஆகிய நிலையங்களுக்கு நெய்வேலி அனல் மின் நிலைய தொழிலாளர்கள் வெற்றிகரமாகச் சில முக்கிய பணிகளை முடித்துத் திரும்பியுள்ளனர். கல்பாக்கம் அணுசக்தி நிலையம், மத்திய மின்சார நிறுவனம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களைப் பயிற்சிக்காக இங்கு அனுப்புகின்றன.

அண்மையில் வருகை தந்த சோவியத் தூதர், ''நெய்வேலி அனல் மின் நிலையம் சிறப்பாகச் செயல்படுவதற்கு இயந்திரச் சாதனங்களின் தரம் மட்டும் காரணமல்ல; இங்குள்ள பொறியாளர்களின் தொழிற்நுணுக்க அறிவும், நிருவாகத் திறமையும் காரணமாகும்'' எனக் கூறியுள்ளார்.

நெய்வேலி அனல் மின் நிலையம் முழுமையான திறனுடன் இயங்கினாலும், தமிழ்நாட்டின் மின்சாரத் தேவைக்கும், மின் உற்பத்திக்கும் இடையே பெருத்த வேறுபாடு அடுத்த பத்தாண்டுகளுக்கு இருக்கவே செய்யும். ஏறத்தாழ நீர் மின்சாரம் உற்பத்தி செய்யவல்ல எல்லா நிலையங்களையும் பயன்படுத்திக் கொண்டாகிவிட்டது. தமிழ்நாட்டிற்கு நிலக்கரி கொண்டு வர வேண்டுமானால் போக்குவரத்துச் செலவு அதிகமாவதுடன், பெருத்த அளவுக்கு முதலீடும் செய்ய வேண்டும். ஆகவே, தமிழ்நாட்டில் கிடைக்கும் எரிபொருளான பழுப்பு நிலக்கரியை முழு அளவுக்குப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய வேண்டும்.

1961-ல் சோவியத் குடியரசுத் தலைவர் பிரஸ்னேவ் நெய்வேலிக்கு வருகை தந்தபோது, நெய்வேலி அனல் மின் நிலையம் பிற்காலத்தில் 2,000 மெகாவாட் திறனுள்ள நிலையமாக அமையுமென நம்பிக்கை தெரிவித்தார்.

நெய்வேலி திட்டமானது ஜவஹர்லால் நேரு, காமராஜ், டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற சிறந்த மேதைகளின் தீர்க்கதரிசனத்தாலும், வாழ்த்துக்களாலும் உருப்பெற்றது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தச் செயல்படும் அனல் மின் நிலையம், தற்போதைய அளவோடு நின்றுவிடாமல் மேலும் விரிவுபடுத்தப்படும் என்ற நம் நம்பிக்கைக்கு மேற்கூறிய பெரியோர்களின் தீர்க்க தரிசனமும், வளர்ந்து வரும் மின்சாரத் தேவையும், திறம்பட இயங்கும் நெய்வேலி மின் நிலையமும் முக்கியக் காரணங்களாகும் என்றால் அது மிகையல்ல.

''சட்டம் என்பது சமூக நீதிக்கான ஒரு கருவியாக விளங்க வேண்டும். நாட்டுக்குப் புது வடிவம் கொடுக்கும் முயற்சிகளில் சட்டத்தின் பணி உயிர்த்துடிப்புடன் இருக்க வேண்டும்.''

—இந்திரா காந்தி

# தமிழகத்தின் மிகப் பெரிய உப்பளம் உருவாகிறது!

தமிழகத்தில் இராமநாத புரம் மாவட்டம் மிகவும் பின் தங்கியப் பகுதியாக உள்ளது. இதனால் இங்கு வாழும் மக்கள் நிரந்தர தொழில் ஏதும் இல்லாமல் மிகவும் பின் தங்கியவர்களாகவே இருக்கிறார்கள். தமிழக அரசு இக்குறையைத் தீர்த்திட தீவிர முயற்சி எடுத்துக் கொண்டது. அந்த முயற்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தை ஒரு தொழில் உலகமாக உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இராமநாதபுரத்திலிருந்து 44 கிலோ மீட்டர் தொலைவிலும், முதுகுளத்தூரிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவிலும் மாரியூருக்கும் வாலி நோக்கத்திற்கு அருகேயும் சுமார் 5,500 ஏக்கர் நிலம் கேட்பாரற்றுக் கிடந்தது.

இந்த இடத்தில் ''உமரிச் செடி'' என்ற ''உப்பம்பூண்டு'' மட்டும் ஆங்காங்கே முளைத்துக் கிடந்தன. இந்த நிலத்திற்கு 3 பர்லாங் தொலைவில் கடல் இருந்து வருகிறது. கடல் தண்ணீரின் உதவியினால்தான் உமரிச் செடிகள் உயிர் பிழைத்திருந்தன.

கடந்த 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த நிலம் சர்வே செய்யப்பட்டது. மொத்தம் 5,500 ஏக்கர் நிலம் இருந்ததென சர்வேயர்கள் கணக்கிட்டனர்.

சர்வே செய்கையில் அருகிலிருந்த சில 'உமரிச் செடிகள்' அவர்கள் கண்களில் தட்டுப்பட்டன. அந்தச் செடியைப் பிடுங்கி ஆராய்ச்சி செய்தபோது அங்கே உப்பு இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

**உப்பளம் உருவானது!**

அந்தச் சர்வே 1974-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை நீடித்தது. முடிவாக அங்கு மிகப் பெரிய உப்பளம் ஒன்று அமைக்கலாம் என்று தமிழக அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.

எனவே 5,500 ஏக்கர் நிலப் பரப்புள்ள அந்த இடத்தில் ரூ. 4 கோடி செலவில் தமிழ்நாடு உப்புக் கழகத்தின் சார்பாக உப்பளம் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டு கடந்த மே மாதம் 15-ந் தேதியன்று வேலைகள் தொடங்கப்பட்டன.

இதன் முதல் கட்டமாக இதற்காக ரூ. 75 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த உப்பளத்திற்கு **'மாரியூர் வாலி நோக்கம் உப்பளம்'** என்று பெயரிடப்பட்டுள்ளது.

உப்பளத்திற்கான பெரிய கரைபோடுதல், வாரிபாத்திகள் அமைத்தல் போன்ற பணிகளில் கிட்டத்தட்ட 600 பேரிலிருந்து 800 பேர்வரை வேலையில் ஈடுபட்டு உள்ளார்கள். வேலையும் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது.

மொத்தம் 650 வாரிபாத்திகள் அமைக்கப்பட வேண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாத்தியும் 330 அடி நீளமும், 105 அடி அகலமும் கொண்டதாகும். தற்போது 40 பாத்திகளின் வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல், கடல் தண்ணீரை வாய்க்கால் மூலமாகக் கொண்டு வருகிறார்கள். அந்நீரை 'ரிசர்வாயர்' மூலமாக 'கண்டன்சர்' பகுதிக்கு எடுத்து வந்து தண்ணீரின் கனத்தைக் குறைக்கிறார்கள். பின்னர் 30 'வாட்ஸ்' சக்தி உள்ள 2 பைப்புகள் மூலமாக வாரி பாத்திக்கு நீர்பாய்ச்சி சோதனை செய்து வருகிறார்கள்.

முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட 75 இலட்சம் ரூபாயில் இதுவரை ரூ. 10 இலட்சத்திற்கான பணிகள் பூர்த்தியாகி உள்ளது.

**உற்பத்தி எப்போது?**

1976-ஆம் ஆண்டு மார்ச் மாதம், முதல் கட்ட வேலைகள் முடிந்து, உற்பத்தி தொடங்கி விடும். ஆனால் முழுமையான பணிகள் 1978-ம் ஆண்டுதான் முடிவடையும் என்று கூறப்படுகிறது.

**உற்பத்தி தொடங்கிய பின்னர் தமிழகத்திலேயே இது ஒரு மிகப் பெரிய உப்பளமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.** இங்கு ஆண்டு ஒன்றுக்கு 2.4 இலட்சம் டன் வரை உப்பு உற்பத்தி செய்ய முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**மீன்பிடித் துறைமுகம்**

கடலருகே உள்ள ஒரு சிறு குக்கிராமம் தான் வாலிநோக்கம். இங்கு உள்ளவர்கள் தற்போது மீன்பிடிக்கும் தொழில் ஈடுபட்டு உள்ளார்கள். விரைவில் வாலி நோக்கத்தில் மீன் பிடித்துறைமுகம் அமையும். அதற்கான வாய்ப்புக்களும், சூழ்நிலைகளும் தற்போது காணப்படுகின்றன.

மேலும் கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ப வாலி நோக்கத்திற்கு 2 மைல் தொலைவில் கடலில் ஆழமான பகுதி உள்ளது.

உப்பளத்தில் உற்பத்தி ஆகும், உப்பை ஏற்றுமதி செய்யவும் பெரிய கப்பல்களைப் பயன்படுத்தி கப்பல் போக்குவரத்து நடத்தவும் ஏதுவான சூழ்நிலையினை இங்கே இயற்கையே உருவாக்கித் தந்திருக்கிறது.

**கடலருகே நல்ல தண்ணீர்**

கடலில் இருந்து அரைமைல் தள்ளி இருக்கும் வாலி நோக்கம் காட்டில் ஆராய்ச்சி நடத்திய போது, நல்ல தண்ணீர் இருக்கும் அறிகுறிகள் தென்பட்டன. ஆகவே, தொடர்ந்து ஆராய்ச்சி செய்து அங்கு ஒரு உறைக் கிணற்றை அமைத்துள்ளனர்.

இந்தக் கிணற்றில் கிடைக்கும் தண்ணீர் இங்கு வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் போதுமானதாக உள்ளது. மேலும் இந்தக் காட்டில் 6 உறைக்கிணறுகள் தோண்ட திட்டமிடப்பட்டுள்ளது.

உப்பளத்தில் வேலை பார்க்கும் 100 குடும்பத்தினருக்குக் குடியிருப்பு வசதிகள் செய்யவும் மருத்துவமனை, காவல்நிலையம், பேருந்துப் போக்குவரத்து முதலிய வசதிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளன.

போக்குவரத்துக்காக வாலி நோக்கத்திற்கும் கீழக்கடாரம் ரோட்டிற்கும் இடையே உள்ள 8 கிலோ மீட்டர் பாதையையும், வாலி நோக்கத்திற்கும் கடுகு சந்தை ரோட்டிற்கும் இடையே உள்ள 15 கிலோ மீட்டர் பாதையையும் ரூ. 50 இலட்சம் செலவில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

எனவே, மாரியூர்-வாலி நோக்கம் உப்பளம், இராமநாதபுர மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

[தகவல்: மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.]

# மறவாதீர்கள்:

## உங்கள் மகள் ஒருநாள்

## மணமகளாக அமர வேண்டியவள்!





திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரிவிதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002



# ஊரகச் சீரமைப்புத் திட்டத்தால் உருவான பயிற்சி நிலையம்

ஜெய்....

வறுமையைப் போக்கி வளமையைப் பெருக்க பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வகுத்தளித்த இருபதம்சத் திட்டத்தின் அடிப்படையில், சோமங்கலம் கிராமத்தில், பிரதமர் அவர்களே தொடங்கி வைத்த ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் பணிகள் துவங்கிவிட்டன. இத்திட்டம் செயல்படும் பத்து கிராமங்களிலும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாகத் துவக்கி வருகின்றனர்.

கதர் கிராமத் தொழில்களில் பெரிதும் குறிப்பிடத்தக்க பனைத் தொழிலை வளர்க்கும் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் பனந்தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் அப்பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க ஒரு முன்னோடித் திட்டத்தினை வகுத்துச் செயற்படுத்தத் தொடங்கி விட்டது. இதற்காகச் சோமங்கலம் திட்டப் பகுதியில், பயன்படுத்தப்படாமல் இருக்கும் இளம் பனைகளின் மட்டைகளிலிருந்து பனந்தும்பு தயாரிக்க-ஏற்றுமதித் தரமுள்ள பனந்தும்பு தயாரிக்க இயலுமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. இந்தப் பரிசீலனையில் இங்குக் கிடைக்கும் தும்பு, நல்ல தரமுடையதாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

## ஊனமுற்றோர்களுக்கும் பனந்தும்பு பயிற்சி நிலையம் வாழ்வளிக்கிறது



அமைதியுடன் ஆக்கப் பணி புரியும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எப்போதும் போல் இத்திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முந்திக்கொண்டுவிட்டது.

இதைத் தொடர்ந்து, 1976 பிப்ரவரி 21-ல் சோமங்கலம் அரிசனக் குடியிருப்பில், விரிந்து பரந்து நிற்கும் ஓர் ஆலமரத்தின் அடியில், அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் குழுவின் பனைத் தொழில் இயக்குநர் திரு. என். கோபிநாதன் பனந்தும்புப் பயிற்சி நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அவர் தொழில் வினைஞர்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் கொடுக்க உறுதியளித்தார். தொடங்கப்பட்டுள்ள இந்த முன்னோடித் திட்டத்தில் தற்போது 15 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற இருவரும்கூட இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

உடல் ஊனமுற்ற ஒருவரில் 14 வயதுடைய மல்லிகா என்ற சிறுமியை விசாரித்தபோது "என் அப்பா இறந்து விட்டார். அம்மா வயல் வேலைக்குப் போகிறார். நான்தான் எங்கள் வீட்டில் மூத்த பெண். எனக்குப் பின் இரண்டு குழந்தைகள். என் அம்மாவுக்கு ஒரு நாளைக்கு 1.75 ரூபாய் கூலி. இதைத் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு வருமானம் இல்லை. இப்போது இந்தப் பயிற்சித் திட்டத்தில் எனக்கு நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் கிடைக்கிறது. இந்த வருமானம், எங்கள் குடும்பத்தில் பட்டினியே இல்லை என்று செய்துவிடும்" என்று உள்ளமும், முகமும் மலரக் கூறுகிறாள். ஏழைகள் வாழ்வில் மறுமலர்ச்சி பூத்து மலர்வதைக் கண்டு நாமும் பெருமைப்படுகிறோம்.

"மூன்று மாதப் பயிற்சிக்குப் பிறகு, இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கூலிக்குப் பதிலாக, தாங்கள் அடித்துத் தருகிற தும்புக்குரிய விலையைப் பெறுவார்கள்" என்றும் அப்போது இவர்கள் நபர் ஒன்றுக்கு 5 ரூபாய் வரை சம்பாதிக்கலாம் என்றும், 'விரைவில் மரச்சுத்தியல் கொண்டு தும்பு அடிப்பதற்குப் பதிலாகத் தும்படிக்கும் இயந்திரத்தைப் பொருத்திக் கொடுக்க முயற்சிக்கிறோம்" என்றும் இணையத்தின் நிருவாக இயக்குநர் திரு. கே. சம்பந்தம் அவர்கள் குறிப்பிட்டார்.

"இந்தத் தும்படிக்கும் பயிற்சித் திட்டம் முழுவெற்றி பெறுமானால் இது தும்பை சுத்திகரித்துத் தரம் பிரிக்கும் நிலையமாகவும் மாற்றப்படும்" என்றும் "தும்பைத் தூத்துக்குடிக்கு அனுப்பாமல் இங்கேயே சுத்தம் செய்து தரம் பிரிப்பதால் தும்புக்கு விலையும் அதிகமாகக் கிடைக்கும்" என்றும் அதன் பிறகு இங்கேயே ஒரு 'பிரஷ்' தொழிற்சாலையையும் நிறுவ இணையத்தின் பெருந்தலைவர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

# காதி கிராப்ட்




உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக் கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட
தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

**காதி கிராப்ட்**
தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381



ஊதியம் தரப்படுகிறது.



பனந்தும்பு அடித்தல்

தற்போது சோமங்கலத்திலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி எல்லைக்குள் உள்ள வடலிப்பனைகளிலிருந்து பத்தல்கள் சேகரிக்கப்படுகின்றன. பத்தல்களை அறுத்தெடுக்க, இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, மாதவரம் பனைப்பொருள் திட்டக் கண்காணிப்பாளர், பயிற்சியளிக்கிறார். உயர்நிலைப் பள்ளியின் எல்லைக்குள் உள்ள வடலிப் பனைகளிலிருந்து பத்தல் சேகரித்துக்கொள்ள சைதைக் கோட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு 5 பத்தல்வரை அடித்த பயிற்சியாளர் ஒவ்வொருவரும் இப்போது 15 பத்தல் வரை அடிக்கிறார்கள்.

பிரதமரின் 20 அம்சத்திட்ட அடிப்படையில் பனைத்தொழில் மூலம் வேலைவாய்ப்பு, குடும்ப வருவாய் உயர்வு ஆகியவற்றை மையமாகக்கொண்டு தொடங்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி நிலையத்தைத் தொடர்ந்து திட்டப் பகுதியில் மேலும் பல நிலையங்களைத் தொடங்கி நடத்த மாநில கதர் கிராமத் தொழில் வாரியத்தின் உதவியுடனும் அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் குழுவின் பேராதரவுடனும் ஆவன செய்ய மாநில பனைவெல்லம் மற்றும் பனந்தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தக்க முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

இணையத்தின் பெருந் தலைவர் திரு வி. வி. இராமசாமி அவர்கள் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்கிவிட்டு, ''அயல் வியாபாரிகள் இந்தத் திட்டப் பகுதியில் தும்பு சேகரிக்கும் நோக்கத்தோடு எத்தகைய இடையூறும் செய்யாமல் இருந்தால் 100 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்குத் தலா 150 ரூபாய் சம்பாதிப்பதற்கான வழி வகைகளைக் காணமுடியும்'' என்றும், ''இப்பகுதியில் உள்ள பனைகளை வாடகையின்றிப் பயன்படுத்திக் கொள்வதற்கு இணையத்திற்கு அனுமதி கொடுத்தால் இத் தொழிலை மிகச் சிறப்பான முறையில் வளர்க்க முடியும்'' என்றும் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் பெருஞ்செல்வமான பனைமரத்தைக் கற்பகத்தரு என்று கூறுவார்கள். பிரதமரின் மாபெரும் திட்டத்திற்குத் தங்களை முதலாவதாக ஈடுபடுத்திக் கொண்ட பெருமையில் அம் மரங்கள் ஊரின் எல்லையில் அசைந்தாடிக் கொண்டிருந்தன. உழவர் வாழ்வு வளம் பெற இக் கிராமத் தொழில்கள் உறுதுணையாக இருக்குமென்பதை நிலைநாட்டும் வகையில் துவக்கப்பட்டிருக்கும் இந்தப் பயிற்சி நிலையம் சிறந்து வளரட்டும்.

—சாமி பழனியப்பன்.




## மாணவ மணிகளுக்கு மலிவு விலையில் பாடநூல்கள்!

''பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலையில் பாடநூல்கள், எழுதுபொருள்கள் வழங்குதல்; விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படுதல்''

என்பது இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்களிலே ஒன்றாகும். இதனைச் செயல்படுத்தும் வகையிலே தமிழ்நாட்டில் பள்ளி கல்லூரிகளுக்கான பாடநூல்கள் மலிவு விலையிலே வழங்கப்பட்டு வருகின்றன.

ஒன்று, இரண்டு, மூன்று வகுப்புகளுக்கான பாடநூல்கள் இளஞ்சிறார்களின் மனத்தைக் கவரும் வகையில் பல வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன. விலையும் குறைந்த அளவே நிர்ணயிக்கப்படுகின்றது.

மேற்கண்ட வகுப்புகளில் பயிலும் பதினெட்டு இலட்சம் ஏழை, எளிய மாணவர்களுக்காக ரூ. 85,89,579 மதிப்புள்ள பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிப் பாடநூல்களுக்கான படிகள் ( Copies ) படிப்படியாக அதிகரித்து வந்துள்ளன.

1974-75-ல் இந்நிறுவனம் 200 இலட்சத்திற்கும் மேற்பட்ட படிகள் வெளியிட்டுள்ளது. ஓர் ஆண்டில் நிறுவனம் வெளியிடும் பாட நூல்களின் எண்ணிக்கை 32 மில்லியன் ஆகும்; இவை 176 தலைப்புகளில் வெளியிடப்படுகின்றன.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில், குறைந்த விலையில் தரமான நூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

# படமும் செய்தியும்



மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் 1.3.'76 அன்று தலைமைச் செயலகத்தில் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றார்.



நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளில் வழங்கப்படும் பொருள்கள் தரமானவையாக உள்ளனவா என்று ஆளுநர் 1.3.'76 அன்று சோதனையிட்டார்.



சென்னைக்கு 2.3.'76 அன்று வருகை தந்த பல்கேரிய நாட்டு கலை, கலாச்சார அமைச்சர் திருமதி லிவிமிலா ஷிவ்கோவா அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்கப் பட்டார்.

பல்கேரிய நாட்டுக் கலை, கலாச்சார அமைச்சருக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்ரமணியம் அவர்கள் 2.3.'76-ல் நினைவுப் பொருள் வழங்கினார்.





சென்னை தீவுத் திடலில் 2.3.'76 அன்று நடைபெற்ற சுற்றுலாப் பொருட்காட்சி நிறைவு விழாவில், சிறந்த அரங்குகளை அமைத்தவர்களுக்கு திரு. ஆர். வி. சுப்ரமணியம் பரிசு வழங்கினார்.





ஆளுநர் அவர்கள் 3.3.'76 அன்று ராஜபவனத்தில் தமிழக எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடினார்.

சென்னைக்கு 3.3.'76-ல் வருகை தந்த யுகோஸ்லேவிய நாட்டுச் செய்தித் துறை அமைச்சர் திரு. மகமத் பெர்போராமிக் அவர்கள் வரவேற்கப்பட்டார்.







தமிழ்நாடு குற்றவாளிகள் சீர்திருத்தக் கழகத்தின் மாநில மாநாடு 5.3.'76 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ்., அவர்களுக்குக் காவல் துறையின் சார்பில் 9.3.'76 அன்று அணி வகுப்பு மரியாதை வழங்கப் பெற்றது.



வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் குறித்து நடைபெற்ற தென்மண்டல மாநாடு 8 3.'76 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.







# தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்

ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற்றிடவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் தகுந்த வாழ்வினை நடத்திடவும் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவைகளைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, கற்றவர்கள், கல்லாதவர்கள், தொழில் பயிற்சி பெற்றவர்கள், பெறுதவர்கள் ஆகியோர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடுதல் இன்றியமையாததாகும். இவைகளுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையில் அமைந்துள்ளது பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம். அது

**''எல்லா மக்களுக்கும், குறிப்பாக எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பு, பயிற்சி வாய்ப்பை அதிகரிக்க உதவித் தொகையுடன்கூடிய பயிற்சித் திட்டம்''**

இதை விரைந்து நிறைவேற்றுவதில் மைய, மாநில அரசுகளின் வேலைவாய்ப்பு, பயிற்சித்துறை இயக்குநரகங்களும், பல்வேறு தொழில் நிறுவனங்களும் பெரும் பங்கு கொண்டுள்ளன.

**தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்**

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடுவதில் ''தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்'' முக்கிய இடத்தைப் பெற்று விளங்குகிறது.

நாட்டிலுள்ள அனைத்துத் தொழிற் பயிற்சி நிலையங்களும் மாணவர்களுக்குப் பாடமுறையில்தான் தொழிற் பயிற்சியளிக்கின்றன. ஆனால் செய்முறைப் பயிற்சி அளித்திடுதல் இன்றியமையாததாகும். இத்தகு பயிற்சியினை நடைமுறைக்கு அரசு தொழில் நிறுவனங்களும், தனியார் தொழில் நிறுவனங்களும் அளித்திட வேண்டுமென்பதற்காக தொழில் பழகுநர் பயிற்சிச் சட்டத்தினை அரசு 1961 ஆம் ஆண்டில் கொண்டு வந்தது.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை குறிப்பிட்ட 216 தொழில் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று அவைகளில் 103 வகைத் தொழில்கள் பயிற்சியளிக்க வரையறுக்கப்பட்டுள்ளன. தொழில் பழகுநர்கள் புதியவர்களாகவும், தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களாகவும் இருக்கலாம். தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான தகுதிகள் படைத்த விண்ணப்பதாரர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையினைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**பயிற்சியில் சேரத்தகுதி**

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் தொழிற்பயிற்சி நிலையங்களின் முதல்வர்களாலும், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகங்களாலும் தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சியில் சேர 14 வயதுக்கு மேற்பட்ட பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், அதற்குக் குறைந்த கல்வி பயின்றவர்கள், தொழிற் பயிற்சி நிலையத்தில் பயின்றவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் இவர்கள் உயரம்,




# ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...

# பூன்-ஓ-மில்க்®கிற்கு நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

**கொழுப்பு மிக்க மிருதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்**

- **பூன்-ஓ-மில்க்கில்,** ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸினேன் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டுகளும், பூட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணைச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிருபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்,** சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன. இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

**பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.**

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் பூன்-ஓ-மில்க் கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



**பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது**

கறவைமாடுகளுக்கு பூன்-ஓ-மில்க் ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

**பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊந்துகோல்**

**பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.**
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

**விநியோகஸ்தர்கள் :—** *தண்ணீர்மலை ஏஜென்சி, 41-ஏ, கிரிரோடு, தி. நகர், சென்னை-600017.*
*இன்டோமேக் கார்ப்பரேஷன், 3, கொல்லன்பட்டறை தெரு, கீழவெளி வீதி, மதுரை-1.*
*ஸ்ரீ அன்னபூரணா எண்டர்பிரைசஸ், 651/1, ஜவகர் பஜார், கரூர், திருச்சி மாவட்டம்.*
*விவேகானந்தா எண்டர்பிரைசஸ், 101, மருத்துவமனை சாலை, சீர்காழி அஞ்சல், தஞ்சை மாவட்டம்.*
*நடராஜ் ஏஜென்ஸீஸ், கோபிசெட்டிபாளையம், கோவை மாவட்டம்.*

**விற்பனையாளர்கள் இல்லாத பகுதிகளில் ஸ்டாக்கிஸ்ட்டுகள் தேவை.**

> "வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்திற்குத் தேவையான பொருள்களில் பெரும்பாலானவற்றை இந்நாட்டிலேயே தயாரிப்போம். நமது நிபுணர்களையும், நமது பண்டங்களையும் உரிய மதிப்புடன் நடத்துவோம். எங்கும் வியாபிக்கும் சுதேசி உணர்வு இனிமேல் பெருகிக் கொண்டே போக வேண்டும். இதுதான் நாலாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்."
>
> —இந்திரா காந்தி

மார்பளவு, கண்பார்வை, போன்றவைகளில் வரையறுக்கப் பெற்ற தகுதிகள் பெற்றிரு வேண்டும்.

புதிதாகப் பயிற்சிக்குச் சேர்பவர்கள் தகுதி வாய்ந்த மருத்துவர்களிடமிருந்து உடல் நலச் சான்றிதழும் பெற்றுத் தர வேண்டும். அனுமதிக்கப்படத்தக்க வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள், அவர்கள் அந்நிலையங்களில் பெற்ற பயிற்சிக் காலத்திற்கேற்றவாறு, தொழில் பழகும் காலத்தின் பயிற்சிக் காலம் குறைக்கப்பட அவர்கள் தகுதியுள்ளவர்களாவர். ஆண்டில் பிப்ரவரி, ஆகஸ்டுத் திங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

தொழில் பழகுபவர் ஒவ்வொருவரும், அவர் உரிய வயதடையாதவராய் இருந்தால் அவருடைய காப்பாளரும் வரையறுக்கப்பெற்ற படிவத்தில் தொழில் அதிபருடன் அவரின் தொழில் பழகும் நிலைகுறித்து ஓர் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும். இருசாராரும் அந்த ஒப்பந்தத்தின் கீழ் தங்களின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றிட வேண்டும். அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு அல்லது தகராறு எழுந்தால் அதனை முடிவு செய்ய 'மாநில தொழில் பழகுவோர் ஆலோசகருக்குத்' (State Apprenticeship Adviser) தெரிவிக்க வேண்டும்.

**பயிற்சிக்கான காலம்**

பயிற்சிக்காலம் தொழில்களின் வகைகளுக்கு ஏற்றவாறு 6 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரை பிரிக்கப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சி பழகுநர்களுக்கு இப்பயிற்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை பயிற்சி (Basic Training), தொழிற்கூடப் பயிற்சி (Shop-floor Training), தொடர் போதனைப் பயிற்சி (Related Instructions) போன்ற மூன்றுவகைப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. புதிதாகச் சேர்கின்ற அனைவர்க்கும் குறிப்பிட்ட காலங்கள் வரை அடிப்படை பயிற்சியளிக்கப்படுகின்றது. தொழிற்கூடப் பயிற்சிக்குச் செல்லுகின்ற வரை இப்பயிற்சி அளிக்கப்படும்.

தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சிக்கு வருபவர்களுக்கு அடிப்படை பயிற்சி தேவையில்லை. இப்பயிற்சியாளர்கள் நேராக தொழிற்கூடப் பயிற்சிக்குச் செல்லலாம். தொழிற் பயிற்சிக் காலம் முழுவதிலும் இவர்களுக்குத் தொடர் போதனைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**தொடர் போதனைப் பயிற்சி**

தொடர் போதனைப் பயிற்சி தமிழ் நாட்டில் வடசென்னை, அம்பத்தூர், கிண்டி, கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், மேட்டூர் அணை, கோயம்புத்தூர், பேட்டை (திருநெல்வேலி), மதுரை ஆகிய 11 தொழிற்பயிற்சி நிலையங்களில் சீராக வழங்கப்பட்டு வருகின்றன. வேலூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விரைவில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சி வகுப்புகளுக்குத் தங்களுடைய பயிற்சியாளர்களைத் தொழிற் நிறுவனத்தார் அனுப்பி வைக்க வேண்டும்.

**உதவித் தொகை**

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு உதவிடும் விதத்திலும், தங்கள் வாழ்வை அவர்கள் சிரமமின்றி ஓரளவு நடத்திச் செல்லுகின்ற வகையிலும் பயிற்சி உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய அரசின் 23-1-1976-ஆம் நாளின் ஆணைக்கிணங்க முன்பு வழங்கப்பட்டு வந்த உதவித்



# டான்சியின் எழில் படைப்புகள்!

காலத்தை வெல்லும் டான்சியின் தயாரிப்புகள் மர மற்றும் எஃகு சாதனங்கள் டான்சியின் மேன்மையான படைபபுகள். நாளைய வடிவமைப்புகளில் இன்றே வழங்கப்படும் இச்சாதனங்கள் நீடித்து உழைப்பவை, நாற்காலிகள், மேசைகள், பீரோக்கள், கட்டில்கள் முதலிய பற்பல எழில்மிகு தயாரிப்புகளை வழங்குவது டான்சி.



டான்சி

தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம்,
26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014



தொகைகள் மாற்றப்பட்டு தற்பொழுது திங்கள் ஒன்றுக்கு முதலாம் ஆண்டில் ரூபாய் 130, இரண்டாம் ஆண்டில் ரூபாய் 140, மூன்றும் ஆண்டில் ரூ. 150, நான்காம் ஆண்டில் ரூ. 200 என்ற வகையில் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று பின்னர் பயிற்சி பழகுநர்களாக வருபவர்கள், அவர்கள் சேர்க்கப்படுகின்ற பயிற்சி ஆண்டுகளுக்கு ஏற்றவாறு உதவித்தொகை பெறுவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்பொழுது தமிழ் நாட்டில் 31-1-76-ன் படி ஒதுக்கப்பெற்ற இடங்கள் 7,442. ஆனால் தற்பொழுது தொழிற்பயிற்சி பெற்று வருபவர்கள் 7,578 பேர்கள். ஒதுக்கப்பட்ட இடங்களையும் கடந்து 101.8 சதவிகிதத்தை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,240 பேர்கள், மலைச்சாதியினர் 5 பேர்கள், பெண்கள் 34 பேர்கள், உடல் ஊனமுற்றவர்கள் 22 பேர்கள், சமுதாயத்தில் நலிந்த, பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் 3,225 பேர்கள் ஆவர்.

## தொழில் பழகுநர் பயிற்சி வாரியம்

1961-ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டம் 1973-ஆம் ஆண்டில் திருத்தப் பெற்று மேலும் பல வகைத் தொழில்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவைகள் பொறியியல் கல்வியிலும், தொழில் நுட்பக் கல்வியிலும் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சியளிக்க வகை செய்கின்றன. இவைகளுக்கென மைய அரசால் நிருவகிக்கப்படும் 'தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் (Apprenticeship Training Board) செயல்பட்டு வருகின்றது. மத்திய அரசின் கல்வி மற்றும் சமூக நலத்துறை அமைச்சகத்தின் பொறுப்பில் உள்ள இவ்வாரியம் தொழிற் பயிற்சியினை ஊக்குவிப்பதில் முழுப் பொறுப்பினை பெற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் இப்பயிற்சிக்கு வரவேற்கப்படுகின்றனர்.

இச்சட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள ஒவ்வொரு தொழில் நிறுவனத்தாரும் குறிப்பிட்ட பொறியியல் பட்டதாரிகளையும், டிப்ளமோதாரர்களையும் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழில் நுட்பதாரர், ( Technician ) பட்டதாரிப் பயிற்சியாளர் ஆகிய தகுதிகளைத் தந்து வரையறுக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சிகளின்படி பயிற்சியளிக்க வேண்டும். இவர்களுக்குக் குறிப்பிட்ட விண்ணப்பதாரர்கள், மைய அரசின் தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் வாயிலாக அனுப்பப்படுகின்றனர்.

இப்பயிற்சியாளர்களின் பயிற்சிக்காலம் ஓராண்டு ஆகும். இப்பயிற்சிக் காலத்தில் தொழில் நுட்பக் கல்வி, பொறியியல் கல்வி பட்டதாரிகளுக்குத் திங்கள் ஒன்



றுக்கு ரூபாய் 280/-ம், டிப்ளமோதாரர்களுக்கு ரூ. 180/-ம் குறைந்த அளவு பயிற்சி உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன. தொழில் நிறுவனத்தார் முதலில் இத்தொகைகளை வழங்கி பின்னர் அதில் 50 சதவிகிதத்தை மைய அரசின் மண்டலப் பயிற்சியாளர் ஆலோசகரிடமிருந்து ( Central Apprenticeship Adviser ) பெற்றுக் கொள்ளலாம். காலண்டிற்கு ஒருமுறை என்ற அளவில் இத்தொகைகள் தரப்படும்.

இப்பயிற்சிகளுக்கும் தொழில் நிறுவனத்தார் தங்கள் விருப்பம் போல் விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இந்நிறுவனங்களுக்கு விண்ணப்பதாரர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநராலும், தொழில் பழகுநர் பயிற்சி வாரிய இயக்குநராலும் அனுப்பப்படுகின்றனர். பயிற்சிகள் தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுத்துறை போன்ற தொழில் நிறுவனங்களில் அளிக்கப்பட்டு வருகின்றன.

## அனைத்திந்தியத் தொழில் தேர்வு

திருத்தப்பெற்ற சட்டத்தின் கீழ் 1-2-1976-ன்படி, தென் மண்டலத்தில் தொழில் நுட்பக் கல்வி, பொறியியல் கல்வி பட்டதாரிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 1,981 ஆகும். டிப்ளமோதாரர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 2,245 ஆகும். தமிழ்நாட்டில் இவைகளின் எண்ணிக்கை முறையே 793, 813 ஆகும். 21-2-76-ஆம் நாளன்றுள்ள கணக்கின்படி தற்பொழுது தமிழ் நாட்டில் சுமார் 897 பொறியியல், தொழில்நுட்பக் கல்வி பட்டதாரிகளும், டிப்ளமோதாரர்களும் பயிற்சியளிக்கப் பட்டு வருகின்றனர்.

தொழில் பழகும் கால அளவை முடித்து, தேவைப்பட்டகுறைந்த காலத்திற்குத் தொழிற்சாலைக்கு வந்து தொழில் பயின்றுள்ள தொழில் பழகுநர் ஒவ்வொரு வரும் ஆண்டிற்கு இருமுறை தேசிய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தின் சார்பில் நடத்தப்படும் அனைத்திந்தியத் தொழில் தேர்வினை எழுத அனுமதிக்கப்படுகின்றனர். இத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மைய-மாநில அரசுகளாலும், நாடு முழுவதிலுமுள்ள தொழில் நிறுவனத்தாராலும் ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய தொழில் பழகும் நிலைச்சான்றிதழ் வழங்கப்படும்.

பிரதமர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ஒன்றாக விளங்குகின்ற இத்திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வேலையின்மை நீங்குவதற்கு வழிகோலுகிறது. பயிற்சிக்குச் செய்கின்ற முதலீடு உற்பத்திக்குச் செய்கின்ற முதலீடு ஆகும்.

ஆகவே, வளமான வாழ்க்கைக்கு வழிகோலும் வகையில் 'தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்' சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—ஆயிரராமன்.

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்,

ரெ எக்ஸ். 406.

**14, தியாகராயர் சாலை, வேப்பேரி, சென்னை 600 007**

தொலைபேசி : 30877, 30878 — தந்தி : ''ஹவுஸ்பாங்க்''

செயலாளர் : 33000 — தபால் பெட்டி : 486

தலைவர் : **திரு. பழனிவேல்ராஜன்,** பி.எஸ்.ஸி., பி.எல்.,

உப–தலைவர் : **திரு. பி. கஸ்தூரி பிள்ளை**

பொருளாளர் : **திரு. எஸ். பழனிசாமி,** எம். ஏ.,

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 3,09,02,125/- |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை | .. | ரூ. 25,66,31,157/- |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்குப் புதிய வீடு கட்ட 15 வருட நீண்ட காலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்சக் கடன் அளவு

| | | |
|---|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு | .. | ரூ. 30,000/- |
| புதிய வீடுகள் கட்டுவதற்கு (கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம்) | .. | ரூ. 10,000/- |

**பூ. க. பத்மநாபன்,** பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.



# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை) எண் 151.
## சேலம்-1.

**தபால் பை எண். 171** — **தொலைபேசி எண் : 2402**

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளி பாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாயக்கம் பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

**சொந்த நிதி ரூ. 327 லட்சம்.** — **நடைமுறை மூலதனம் 1711 லட்சம்**

### வட்டிவிகித அட்டவணை

| | | |
|---|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$ % |
| | ரூ. 10,000/-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) | $3\frac{1}{2}$ % |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் | |
| | 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3 % |
| | 46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும் | $3\frac{1}{2}$ % |

**பிக்செட் டெபாசிட்டுகள் :** ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு :

1. 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் 6 %
2. 6 மாதத்திற்கும் அதற்குமேல் 9 மாதத்திற்குள் $6\frac{1}{2}$ %
3. 9 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் $7\frac{1}{2}$ %
4. 12 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் $8\frac{1}{2}$ %
5. 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் $9\frac{1}{2}$ %
6. 61 மாதத்திற்கும் அதற்குமேலும் $10\frac{1}{2}$ %

**நடப்புக் கணக்கு $\frac{1}{2}$ %** — **சேமிப்புக் கணக்கு 6 %**

ரூ. 5000/-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. ரெக்கரிங், பிராவிடெண்ட் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க.

**இ. பாலசுந்தரம்,** பி.ஏ.,
துணைப் பதிவாளர்,
நிர்வாக அதிகாரி.

**பி. காசி,** பி.எஸ்.சி., எச்.டி.வி.,
காரியதரிசி.

**எஸ். ஆறுமுகம்,**
தலைவர்.

# தமிழ் ஞாயிறு நமச்சிவாயர்

நெ. து. சுந்தரவடிவேலு



'நமச்சிவாய நறுமலரை ஆடவர் அறிவர்; மகளிர் அறிவர் சிறுவரறிவர்; சிறுமியரும் அறிவர். அது 'கடலக'த்து மலர்ந்தது; தமிழக முடையது; கணக்கெலாம் நன்கு அறிந்தது; கோடாது; குவியாது; வாடாது என்றும் ஒரே தன்மையது.

"அம்மலர் முயற்சியால் ஈட்டும்; மலர்ந்து வழங்கும்; தானுந் துய்க்கும்.

''அதில் பழமையும் உண்டு; புதுமையும் உண்டு.''

இப்படிப் பாராட்டியவர் யார்? அன்று, சென்னை இலயோலாக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக விளங்கிய திரு. இ. கே. நடேச சர்மா. எப்போது பாராட்டினுர்? நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்.

தமிழ் ஞாயிருக விளங்கிய கா. நமச்சிவாயர், வடார்க்காடு மாவட்டம் காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தார். தந்தை பெயர் இராமசாமி; எளிய தொடக்கப் பள்ளி ஆசிரியர். தாய் அகிலாண்டவல்லி. பிறந்தது, 1876-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இருபதாம் நாள். தந்தையின் பள்ளியிலேயே படித்தார். நன்ருகவும் படித்தார்.

பதினைந்து வயதில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். தண்டையார் பேட்டையில் தொடக்கப்பள்ளி ஆசிரியரானுர். தொடர் கல்வியில் கருத்தூன்றியது. தமிழின் மேல் நாட்டஞ் சென்றது.

அப்போது, தொண்டை மண்டல துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கிய, திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களை அணுகினுர். அக்காலப் பண்டிதர்களுக்கு, தமிழ்ப் பாடஞ் சொல்லுதல் பிழைப்பல்ல, தொண்டு. பிள்ளையவர்கள் நமச்சிவாயரை ஏற்றுக் கொண்டார்.

எக்காலத்திலும் மத சம்பந்தமான சச்சரவுகளில் தலையிடக் கூடாதென்றும் சாதிச் சண்டைகளில் புகுதல் கூடாதென்றும் வாக்குறுதி பெற்ருர். அரசியல் அடாவடிகளில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்னும் உறுதி பெறத் தேவையில்லாத காலம் அது.

ஆசிரியத் தொழிலையும் இடையில் ஓராண்டு உயர்நீதிமன்ற அலுவலையும் பார்த்துக்கொண்டே பகுதி நேரம் தமிழ் கற்று வந்தார். பதின்மூன்ருண்டுகள் பொறுமையாகக் கற்ருர். உண்மையான பேராசிரியரிடம் அத்தனை ஆண்டுகள் பொறுமையாகப் படித்த நமச்சிவாயர் நல்ல புலமை பெற்ருர். இலக்கண இலக்கியங்களை முறையாக அறிந்த அறிஞரானுர்.

தொடக்கப் பள்ளியில் பணிபுரிந்து வந்த நமச்சிவாயர் புனித சேவியர் பள்ளியின் தமிழ் அய்யாவாகச் சென்ருர்.

பிறகு திறமைமிக்க தமிழாசிரியராக விளங்கிய நமச்சிவாயரை நார்த்விக் பெண்கள் பள்ளி அழைத்துக் கொண்டது.

கற்ருேரைக் கற்ருேர் காமுறுதல் இயல்பு. நல்லாசிரியர் நமச்சிவாயரை வேப்பேரி புனித பால் உயர்நிலைப் பள்ளி விரும்பித் தேடிக்கொண்டது. அங்கு பன்னிரண்டு ஆண்டுகள் சீரிய பணிபுரிந்தார்.

அக்காலத்தில், தொடக்கப் பள்ளிகளுக்கான பாடநூல்களைக் கூட வெள்ளைக்காரர்களே எழுதினுர்கள். அம்மரபை முறித்து, தமிழ்ப்பிள்ளைகளுக்கான பாட நூல்களை எழுதிய முதல் தமிழர் நமச்சிவாயர்! அவை வெளியாயின. எதிர்ப்பு எழுந்தது.

ஏற்கெனவே, பாட நூல்களை எழுதிப் பணம் சேர்த்துக்கொண்டிருந்த வெள்ளையர் வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பர்? நமச்சிவாயர் நூல்களைப் புறக்கணிக்கச் சூழ்ச்சி எழுந்தது. அதில் தோல்வி. அடுத்து? நமச்சிவாயரை வேலை நீக்கம் செய்ய் முயன்றனர். மாணவர்களின் முயற்சியால் நிர்வாகிகளின் கவனம் ஈர்க்கப்பட்டது. நமச்சிவாயர் தொடர்ந்து வேலை செய்தார்.

'பால பாடம்' முதல் சிறுவர் சிறுமியருக்கான நூல்களை எழுதிய முதல் தமிழர் நமச்சிவாயர் என்பது மட்டுமல்ல அவருக்குள்ள சிறப்பு. முதல் தரமான நூல்களை எழுதியவர் அவர்.

சிறுவர்களுக்கான பாடநூல்களை எழுதிய நமச்சிவாயர், உயர்நிலை வகுப்புகளுக்கும் இளங்கலைப் படிப்பிற்கும் ஏற்ற நூல்களை எழுதி, முன்ஞேடியாக விளங்கி

ணூர். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையைப் பதிப்பித்தார். தணிகைப்புராணம், தஞ்சைவாணன் கோவை, இறையனார் களவியல் ஆகிய நூல்களையும் பதிப்பித்தார். பிரிதிவிராஜன், கீசகன் என்னும் இரு நாடகங்களை எழுதி வெளியிட்டார்.

*1914-ஆம் ஆண்டு சென்னையில் மேரி இராணியார் கல்லூரி தொடங்கப்பட்டது.*

'பெண்கள், கல்லூரியில் சேர்வது வீண்; ஆண்கள் இடத்தைப் பறித்துக் கொள்வதாகும்' என்று பறையறைந்து கொண்டிருந்தவர்கள் அன்றும் இருந்தனர். அவர்கள், பெண்கள் கல்லூரி தொடங்குவதை எதிர்த்தனர். எதிர்ப்பிற்கிடையில் முளைத்தது அக்கல்லூரி. அங்கு தமிழ் கற்பிக்க நமச்சிவாயரைத் தேடி அழைத்தார்கள்.

இருக்குமா, இறக்குமா என்று தெரியாத அப்புதிய கல்லூரியின் தமிழ்ப் பண்டிதராக அமர்ந்தார். அக்கல்லூரி நிலைபெறவும் வளரவும் துணை புரிந்தார். பல்லாண்டு அங்கு பணிபுரிந்த பிறகு, சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்தார். அக்காலத்தில் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகளுக்குப் பேராசிரியர்கள் இல்லை. எவ்வளவு ஆண்டுகள் பணிபுரிந்திருந்தாலும் வெறும் பண்டிதர்களே. ஊதியமும் கட்டை. எண்பதிலே தொடங்கும்; நூற்றைம்பதில் முடியும்.

குறைந்த சம்பளம் பெற்ற சில ஆசிரியர்களில் ஒருவராக இருந்த நமச்சிவாயர் குறை மனிதராகக் காட்சியளிக்கவில்லை. 1928-ஆம் ஆண்டு முதல் 1930-ஆம் ஆண்டு வரை மாநிலக் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்த நான், நமச்சிவாயரைக் கண்டிருக்கிறேன். கல்லூரி ஆசிரியர்கள் அனைவரிலும் மிக மிடுக்கான பொலிவோடு விளங்கியவர் நமச்சிவாயர். ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்பதை அறிவார். உடை மிடுக்கோடு ஊர்திச் சிறப்பும் இருந்தது. நல்ல சொந்தக் காரில்தான் வருவார்; போவார். எளிமையில் பிறந்து வளர்ந்த நமச்சிவாயருக்கு, வறுமைப் புத்தி இல்லை. செல்வம் துய்க்கவும் ஈயவுமே என்பதை உணர்ந்து, அப்படியே பயன்படுத்தினார்.

தான் செம்மையோடு வாழ்ந்ததுபோல், அண்டியவர்க்கும் குறையாது வழங்கினார்.

கல்லூரிப் பண்டிதர் நமச்சிவாயர், சாந்தோம் நெடுஞ்சாலையில் 'கடலகம்' என்ற பங்களாவில் வாழ்ந்தார். அக்காலத் தமிழ்ப் பண்டிதர்கள் அவ்விடத்தை மொய்த்துக் கொண்டிருப்பார்கள். சாதி வேலியோ, சமய மதில்களோ மொழி வாய்க்கால்களோ சூழ வாழவில்லை. அவர், அண்டியவர் அனைவருக்கும் உதவினார்; எவ்விதப் பலனும் எதிர்பாராது உதவினார், பாகுபாடின்றிக் கொடுத்து வாழ வைத்தார்.

நமச்சிவாயருடைய மூத்த மகன் திருத்தணிகைவேல் என்னுடன் இண்டர்மீடியட் படித்தார். எனக்கு வேண்டியவரும் ஆவார். எனவே அவர் இல்லஞ் செல்லப் பல வாய்ப்புகள் கிட்டின. அங்கே கண்டதென்ன? வியத்தகு விருந்தோம்பல்.

அடையா நெடுங்கதவையுடைய அக்கடலகத்திற்குள் நுழைந்தாற் போதும்,

'காப்பியா, தேனீரா, பாலா, மோரா எது வேண்டும்?' என்று கேட்டு உபசரிக்கப்படுவோம்.

## அரசு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை !

கோவை மாவட்டத்திலுள்ள பெரியநாய்க்கன் பாளையத்தில் ஒரு மனுதாரர், தான் நீண்ட நாட்களுக்கு முன்பு டிராக்டர் வேண்டி மனுச் செய்திருந்ததாகவும் அது வாங்குவதற்கு அனுமதி வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டதால் அதனுடைய விலை ஏறிவிட்டது; ஆதலால் தான் மனுச் செய்திருந்த நேரத்தில் என்ன விலை இருந்ததோ அதே விலையில் தனக்கு இப்பொழுது கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தரர். அதற்கு ஆளுநர் இந்த மாதிரியான காலதாமதங்கள் இனி எதிர்காலத்தில் ஆகாது என்றும், காலதாமதம் செய்கின்ற அரசு அதிகாரிகளின் மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்தார்.

மனுச்செய்த 15 நாட்களில் தகுந்த பதில் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லையாயின் நேரடியாக ஆளுநருக்கே விண்ணப்பிக்கலாமென்றும் அறிவித்தார். எடுக்க வேண்டிய நடவடிக்கையில் காலதாமதம் செய்யும் அரசு அலுவலர்கள் மேல் கடும் நடவடிக்கையெடுக்க நேரிடுமென்று ஆளுநர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உண்ணவும் சிற்றுண்டி சேர்ந்து வரும்.

பற்பல வேண்டுகோள்களோடு பலர் நமச்சிவாயரை அணுகுவார்கள். யாரையும் காக்க வைக்கமாட்டார்; நடக்க வைக்க மாட்டார். பதவியில் இருந்த போதுகூட, தனது செல்வத்தை எண்ணிச் செருக்கடையாமல், புகழை எண்ணிப் பூரிப்பில் திளைத்துவிடாமல், உடனுக்குடன் ஆவன செய்வார். பண்டிதர் வீட்டுத் தொலைபேசி பலருக்கும் பரிந்துரைத்தது. அடுத்தடுத்துப் பரிந்துரைத்தது.

நான், பட்டம் பெற்ற பிறகு, பஞ்சாயத்து அலுவராக முயன்று கொண்டிருந்த காலம். திரு. தம்போ என்ற இலங்கைத்தமிழர் உள்ளாட்சி மன்றங்களின் தலைமை ஆய்வாளர். அவரே வேலையில் அமர்த்த வேண்டியவர் என்று கேள்விப்பட்டேன். அவர், இராயப்பேட்டை முனிவர் திரு. வி. க. விற்கு வேண்டியவர் என்று என் காதில் வீழ்ந்தது. இத்தகவல்களோடு, நமச்சிவாயரை நேரே அணுகினேன். திரு. வி. க. வின் வழி, எனக்குப் பரிந்துரைக்கக் கோரினேன்.

உள்ளே சென்ற நல்லவர் மூன்று மணித்துளிகளில் வெளியே வந்தரர். காரும் வந்து நின்றது.

என்னை, தன் பக்கத்தில் அமரச் செய்தார். திரு. வி. க. வின் வீட்டிற்கு விடச் சொன்னார்.

தமிழ்த் தென்றலும் வீட்டில் இருந்தார். நமச்சிவ்ாயர் என் சார்பில் சொன்னவற்றைக் கேட்டார்.

'தம்போ, தமிழ்ப் பற்றுளர். அதனால் என்னைக் கண்டு பேச இரண்டொரு முறை வந்துள்ளார். அதைக் கொண்டு அவரிடம் உரிமை கொண்டாடுவது முறையா என்று தயங்குகிறேன்' என்றார் திரு. வி. க.

நமச்சிவாயர் அவரைத் தேற்றிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு திரும்பினார். பிறகு வேறு நண்பர்கள் வழி முயன்றார். பலிக்காதது அவர் குறையல்ல.

தனக்குக் கேடு செய்தவர்களுக்கும் தாராளமாக விரைந்து உதவிசெய்த பண்பாளர்களில் ஒருவர் நமச்சிவாயர்.

சிறந்த மனிதராக விளங்கிய நமச்சிவாயர், சிறந்த நூலாசிரியர், சிறந்த பதிப்பாசிரியர்.

பாடஞ்சொல்லிக் கொடுப்பதில்? தனக்கு இணைதானே. பள்ளிக் கூடப் பையன்களைக் கவரும்படி கற்பித்த நல்லாசிரியர். நமச்சிவாயர் கல்லூரிப் பெண்களும் விரும்பிக் கற்கும்வண்ணம் தமிழ்ப் பாடஞ் சொன்னார். இயற்கைத் திறமையோடு, தொடர்ந்து கற்ற கல்வி அவருக்குத் துணை நின்றது.

தாய்மொழியாம் தமிழில் புலமை மிக்க நமச்சிவாயர் அதோடு நின்றுவிடவில்லை. கல்லாதது உலகளவு என்பதை உணர்ந்தார். உலகமொழியாம் ஆங்கிலத்தின் வழி பலதுறை அறிவினைப் பெற்றார். வாழ்நாள் முழுவதும் பெற்றார். கற்பதில் தீண்டாமை பாராட்டாதவர் அவர். அதனால், மாநிலக் கல்லூரி மாணவர்களிடையிலும் புகழ்பெற்ற ஆசிரியராகத் திகழ்ந்தார். என்னைப் போன்ற பலரிடம் தமிழறிவும் தமிழ்ப் பற்றும் வளர்த்த சில ஆசிரியர்களில் சிறந்தவராக ஒளிவிட்டார் நமச்சிவாயர்.

அவர், தனிவழி நடந்தார். கடைசிப் பத்துமணித்துளிகள் வகுப்புப்பாடம் நடத்த மாட்டார், பொதுஅறிவு, உரையாடல் நடத்துவார். அரசியல் தவிர்த்த பிறதுறைக் கேள்விகளை எழுப்புவோம். பதில் கூறுவார்.

ஒருமுறை சென்னை ஷெரீப் பாகவும், மேயராகவும் விளங்கிய காலஞ்சென்ற எஸ். இராமசுவாமி நாயுடு என் வகுப்புத் தோழர்; சுறுசுறுப்பானவர். தமிழ்ப்பற்று மிகுந்தவர்.

ஒருநாள் அவர் நீண்ட கேள்வி கேட்டார். இரண்டு மணித்துளிகள் எதையோ ஒப்புவித்த பிறகு, அந்த வாதம் சரியல்லவா என்று கேட்டார்.

நமச்சிவாயர், இளநகையோடு இராமசுவாமியை அமரச் செய்தார். மாணவர் ஒப்புவித்ததைத் தொடர்ந்து ஆசிரியரும் அதே போக்கில் ஒப்புவித்தார். பிறகு பதில் கொடுத்தார். அதில் எரிச்சல் இல்லை; வெகுளி இல்லை அமைதி இருந்தது. பதில் இதோ!

'அமெரிக்க நாத்திகப் பெரியாராகிய இங்கர்சாலின் நாத்திக வாதத்தின் நான்கு சொற்றொடர்களை ஒப்புவித்தீர். அவர் ஆங்கிலத்தில் எழுதியதைத் தமிழாக்கி இவ்வாரக் 'குடியரசு' வெளியிட்டுள்ளது. அதைப் படித்தீர். சில சொற்றொடர்களை மட்டும் நினைவில் வைத்துள்ளீர். அம்மூல நூல் கன்னிமரா நூலகத்தில் கிடைக்கும். அதையே முழுமையாகப் படித்துள்ளேன். நீரும் படியும். பலமுறை சிந்தியும். நாத்திகம் சரியென்று தோன்றினால் அப்போது ஏற்றுக்கொள்ளும்' என்றார்.

பற்றுள்ள சைவராக விளங்கியவர் நமச்சிவாயர். நெற்றியில் சந்தனப் பொட்டில்லாமல் வெளியேபுறப்படாதவர் நமச்சிவாயர். கிருத்திகை தோறும் திருத்தணிகை சென்று வழிபட்டவர் அவர். ஆயினும் 'நம்மவர்'களை வெறுத்தவர் அல்லர். பிற சமயத்தவர் மேல் காழ்ப்போ வெறுப்போ அறியாது வாழ்ந்த சீலர் அவர். பல சமயத்தவரின்- ஏன் நாத்திகர்களாகிய தன்மான இயக்கத்தினரின் - நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்த அறவோர் அவர்.

நல்லாசிரியர் நமச்சிவாயர், நூல்கள் வாயிலாக ஆற்றிய தமிழ்த் தொண்டு பெரிது. அதை விடப் பெரியது, பல்கலைக்கழக மட்டத்தில் தமிழுக்கு இடந் தேடித் தந்தது.

நமச்சிவாயர், கல்லூரிப் பண்டிதரான காலம், தமிழுக்கு ஏற்றமில்லாத காலம். கல்லூரி மாணவ மாணவியர் பெயரளவில் தமிழ் கற்றனர். தமிழ் மட்டும் படித்து வித்துவான் சான்றிதழ் பெற முடியாது. தமிழோடு பிற மொழியொன்றையும் படித்துத் தேறினால் மட்டுமே வித்துவானாகலாம்.

இவ்விழிவுகளைப்போக்கித் தமிழ் மட்டுமே படித்து 'வித்துவான்' சான்றிதழ் பெற வழிவகை செய்த முன்னவர், நமச்சிவாயர், சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழுவில் 1918 முதல் உறுப்பினராகவும், 1920 முதல் 1934 வரை தலைவராகவும் அவர் தொண்டாற்றினார். அன்றும் அது பலருடைய அழுக்காற்றைக் கிளறியது. நீண்டநெடுங் காலம் பொறுப்பு அவரிடம் இருந்ததால், தனித்தமிழ் வித்வான் (அண்மையில் புலவர்) பாடத்தை ஏற்றுக்கொள்ள வைத்தார். கல்லூரிகளிலும் தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத் தந்தார். நல்ல தமிழன் நெடுநாள் பதவி வகிப்பது பெருமைக்காக அல்ல; தமிழை வளர்க்க என்பதைப் படாடோபமின்றி விளக்கியவர் நமச்சிவாயர்.

புலவர் சான்றிதழ் படிப்பை பட்டப் படிப்பு நிலைக்கு உயர்த்த சில ஆண்டுகளுக்கு முன் முயற்சி நடந்தது. அப்போது, தமிழ் அடிப்படையையே தகர்த்து விடக்கூடிய தீங்கு முளைத்தது. எனக்கு நெருக்கமானவர்களே மிரண்டார்கள். 'வெகுளுவோர் வெகுளட்டும்; விரட்டுவோர் விரட்டட்டும், தமிழுக்கு உரிய முழு இடத்தை இழத்தல் ஆகாது' என்று அடம் பிடிக்கும் நெருக்கடிக்கு ஆளானேன். கடைசியில் தமிழ் முழு இடத்தோடு பட்டப் படிப்பாயிற்று, என் நல்லாசிரியர் ஆற்றிய அரும்பணியை அழியாது காக்கும் பேறுவது கிட்டிற்றே என்று மகிழ்கிறேன்.

பொங்கல் நாளைத் ''தமிழ்த் திருநாளாக''க் கொண்டாடும் மரபினைக் கொண்டு வந்தவர் நமச்சிவாயர். பொங்கல், சமயத் திருநாள் அல்ல. எல்லாச் சமயத்தவருக்கும் பொதுவான நாள் என்பதைச் செயலால் விளக்கினார். தமது சொந்தச் செலவில், பழைய பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் ''தமிழ்த் திருநாளை'' ஏற்பாடு செய்தார். அந்நாளில் இந்துக்கள் மட்டுமின்றி, சமணர், இஸ்லாமியர், கிறித்தவர் ஆகியோரையும் கொண்டு திருவள்ளுவரைப் பற்றி உரையாற்றச் செய்தார். நமச்சிவாயர் நடத்திய திருவள்ளுவர் நாள்-தமிழர் திருநாள்-கூட்டங்களில் முதலாண்டு அனைவருக்கும் ஆரஞ்சு கிடைத்தது. இரண்டாம் ஆண்டு ஆப்பிள் கிடைத்தது. இப்படியும் ஒரு கொடையாளித் தமிழர் வாழ்ந்தார்.

'கல்விச் செல்வம், பொருட் செல்வம்' ஆகிய இவையிரண்டினும் மேம்பட்டது நற்குணம்.

'முதலியாரவர்கள் நற்குண நிதி; தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யும் நல்லியல்பு வாய்ந்தவர்கள்; குணங்கண்ட இடத்து மகிழும் குணசீலர். வைதவர்களையும் வாழ்விக்கும் மனப்பான்மையுள்ளவர்கள்.''

## நிலையான பொதுச் சொத்து

வறட்சி நிவாரணத்திற்காக அரசு மேற்கொள்ளுகின்ற செலவினங்கள் முழுவதும் மக்களுக்கு நிலையான சொத்துக்களாக அமைந்திடும். அதாவது செலவிடப்படுகின்ற தொகை அந்த ஆண்டுடன் வீணாகிப் போய் விடாமல் தொடர்ந்து வருகின்ற எல்லாக் காலங்களுக்கும் மக்களுக்கு உதவும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதற்கேற்ப செலவிடப்படும் என்று ஆளுநர் அறிவித்தார்.

என்று அவரோடு பல்லாண்டு நெருங்கிப் பழகிய பண்டித எஸ். எஸ். அருணகிரிநாதர் பாராட்டியதில் மிகை இல்லை.

அவர் (நமச்சிவாயர்) செல்வச் செருக்குடனிருந்ததையோ கடுஞ் சொல் கூறியதையோ நான் கண்டதில்லை; கேட்டதுமில்லை. அவர், ஊருணியாகவும், பழந் தரும் மரமாகவும் இருந்தார் என்றால் மிகையாகாது' என்று நாரண துரைக்கண்ணன் அன்று பாராட்டியதும் உண்மை.

'அவர்தம் (நமச்சிவாயர்) கல்வி எத்திறத்தார்க்கும் பயன் பட்டு வருதல் கண்கூடு. குழந் தைக்குக் குழந்தை மொழியிலும் இளைஞர்க்கு இளமை மொழி யிலும் பேசும்-எழுதும் வாய்ப்பு திரு முதலியார் மாட்டு அமைந் திருத்தல் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத் தக்கது. அவரது செல்வமும் அவரது கல்வியைப் போலவே, பயன்பட்டு வருகிறது.

திரு. முதலியாருக்குச் சீர் திருத்தத்தில் தணியாக் காதல் உண்டு. சாதி மதப்புன்மைகள் பொன்றியொழிய அவர் இளமை தொட்டே முயன்று வருதல் உலகம் அறிந்த தொன்று. பயன் கருதாது பிறர்க்குழைத்தல் திரு. முதலியாரது சமயம்'.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் இப்படிப் படம் பிடித்துக் காட்டி னார், தமிழ்த் தென்றல், விடுதலைப் போர்வீரர், தொழிற்சங்க முன் னோடி, சமத்துவவாதி, திரு. வி. கல்யாண சுந்தரனார்.

எம்மொழியினரும் எச்சமயத்த வரும் எப்பகுதியினரும் பெரு மைப் படத்தக்க கல்வியாளர், புல வர், புரவலர், நல்லோர், நமச்சி வாயர் உருவில் தோன்றினார். தமிழுக்கும் தமிழர்க்கும் சீர் திருத்தத்திற்கும் சொல்லாலும் செயலாலும் பாடுபட்ட அற வோர், போயும் போயும் தமிழ ராகப் பிறந்தாரே! அதன் விளைவு?

நல்லாசிரியர் நமச்சிவாய ருடைய நூற்றாண்டு விழாவை மறந்துவிட்டோம். உலகப் புகழ் பெற்றுத் தந்த திருவள்ளுவ ருடைய ஈராயிரம் ஆண்டு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வந்ததே. அதையே கொண்டாட மனமில் லாத நமக்கு, நமச்சிவாயர் நூற் றாண்டு விழா எம் மாத்திரம்? ஆனாலும் சென்னை நக்கீரர் கழகம் திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி பேராசிரியர் கா. நமச்சிவாயர் நூற்றாண்டு நினைவுச் சொற் பொழிவுகளாக சென்னை மாநிலக் கல்லூரியில் 7-3-76 முதல் 16-3-76 முடிய இலக்கிய ஆய்வுச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து நிகழ்த்தினர்.

குப்பை மேட்டுக் குருக்கத்தி யாக, சென்னை நக்கீரர் கழகம், அதை நிலைவுபடுத்தி விட்டதே! தலைமுறைக்குத் தலைமுறை யாரோ ஒரு 'குறுமுனிவர்' தொல்லை கொடுத்துக் கொண்டு தான் இருப்பார்கள் போலும்!

## இலவச தையல் இயந்திரம்

கோவை மாவட்டத்திலுள்ள குரும்பம்பாளையம் கிராமத்தில் சில கைம்பெண்கள் ஆளுநர் அவர்களை அணுகி வேலைவாய்ப்பு அளித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர் களுக்குத் தையல் இயந்திரம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய் வதாக உறுதியளித்தார். அதன் படி மூன்றில் ஒரு பங்கு விலையை தமிழ்நாடு அரசு இலவசமாகத் தருமென்றும் மீதியை அரசு டைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கிடைக்க ஏற்பாடு செய் யப்படுமென்றும் அறிவித்தார்.

## மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது!



1974-75-ல் கைக்குட்டைகள் ஏற்றுமதியின் மூலம், ஏறக் குறையப் பத்துக்கோடி ரூபாயை இந்தியா சம்பாதித்துள்ளது. முந்திய ஆண்டில், கைக்குட் டைகள் ஏற்றுமதியால் எட்டுக் கோடியே 40 இலட்ச ரூபாய் கிடைத்தது.

ஒரு புகழ்பெற்ற ரகமாகிய, பல வண்ணங்கள் கொண்ட சென்னைக் கைக்குட்டைகள், 1974-75-ல் 7 கோடியே 47 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் சம்பாதித்தன. 1973-74-ல் இக் கைக்குட்டைகள் மூலம் 6 கோடியே 80 இலட்ச ரூபாய் கிடைத்தது. தஹோமே குடி யரசு நாடு 3 கோடியே 80 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கைக் குட்டைகளை வாங்கியது. அதனை யடுத்து சையிரா லியோன், நைஜீரியா, லைபீரியா, இங்கி லாந்து, காம்பியா, ஆகிய நாடு களும் சென்னைக்கைக்குட்டைகளை அதிகமாக வாங்கியுள்ளன.

சென்னை மற்றும் அரபு ருமல்கள் நீங்கலாக, மற்ற கைக் குட்டைகளின் ஏற்றுமதி மதிப்பு 1974-75-ல் 2 கோடியே 23 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 1973 74-ல் அவற்றின் ஏற்றுமதி மதிப்பு ஒரு கோடியே 57 இலட் சத்து 49 ஆயிரம் ரூபாயாகத்தான் இருந்தது. ரஷியா, இங்கிலாந்து, பல்கேரியா, ஃபிரான்ஸ், ஸ்வீடன் முதலிய நாடுகள் இந்த ரகக் கைக்குட்டைகளை அதிகமாக வாங்கியுள்ளன.

இன்னொரு ரகமாகிய அரபு ருமல் கைக்குட்டைகள் 1974-75-ல் பத்து இலட்சம் ரூபாய்க் கும் அதிகமான தொகையைத் தேடித் தந்துள்ளன. சௌதி அரேபியா, துபாய், ஏமன், அரபுக் குடியரசு, பெஹ்ரெய்ன் தீவுகள் முதலிய நாடுகள் கைக் குட்டைகளை அதிகமாக வாங்கி யுள்ளன.



# பாங்காய் வளரும் பத்துக் கிராமங்கள்

கிராமங்களில்தான் இந்தியா வாழ்கிறது. 70 சதவிகித மக்கள் அங்கேதான் விவசாயம் செய்து வாழ்கின்றனர். தேசிய வருமானத்தில் பாதிக்குமேல் விவசாயத்திலிருந்துதான் கிடைக்கிறது.

சுருங்கச் சொன்னால் இந்தியாவின் உயிர்நாடியே கிராமங்களில்தான் இருக்கின்றது.

நகர நல்வாழ்வுக்கு அடிப்படை கிராமங்கள் என்பதால் அதன் வளர்ச்சியிலும், வளத்திலும், நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் இன்று புதிய சமுதாயத்தை உருவாக்குவதில், வெற்றி நடை போட்டு வருகின்றது.

அதன் விளைவாக செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சோமங்கலம் முதலான பத்து கிராமங்கள் புதுமைக்கோலம் பெற்று புத்துணர்ச்சி பெற்று வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்றத்தூருக்கு அருகில் உள்ளது சோமங்கலம் என்னும் கிராமம். இது, ஊரகச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய வளர்ச்சி பெற்று வருவதைப் பார்க்கிறோம். இத்திட்டத்தைப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள்.

கிராமங்கள் செழிப்புக்கு, வகை செய்யும் இத்திட்டத்தின் கீழ் பின்கண்ட பத்து கிராமங்கள் பாங்காய் வளருகின்றன.

1. சோமங்கலம்
2. எருமையூர்
3. நடுவீரப்பட்டு
4. அமரம்பேடு
5. புதுச்சேரி
6. பூந்தண்டலம்
7. நல்லூர்
8. சிறுகளத்தூர்
9. நந்தம்பாக்கம்
10. வரதராசபுரம்.

மேற்கண்ட இந்தக் கிராமங்களில் மொத்தம் 11,026 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 6 ஆயிரம் பேர் அரிசனங்கள். இந்தக் கிராமங்களிலுள்ள மொத்தம் 6,300 ஏக்கர் சாகுபடிப் பரப்பில் ஒருபோக சாகுபடியை இருபோகமாக்கவும், இருபோக நிலங்களில் பலபோக சாகுபடி மேற் கொள்ளவும் மற்றும் உயர்விளைச்சல் ரகங்கள் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கவும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

இங்கு வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் எல்லா அடிப்படை வசதிகளும் கிடைக்கச் செய்வதோடு, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்களால் தீட்டப்பட்ட இந்த அருமையான திட்டம், இந்தியாவிலேயே முதலாவதாகும் என்பதை இங்கு நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

நல்வாழ்வுப் பாதையில் வீறு நடைபோடும் வகையில் பத்துக் கிராமங்களுக்கும் கூட்டுறவு வங்கி, நிலவள வங்கி, ஸ்டேட் பாங்க் ஆகியவை கடன் தந்து தக்க உதவிகள் செய்து வருகின்றன.

நாளும் வளர்ந்து வரும் இந்தக் கிராமங்களில் 100 புதிய கிணறுகள் தோண்டப்படும். அவற்றில் 50 கிணறுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்பு கொடுக்கப்படும். கிராம மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள இப்பகுதியிலுள்ள 10 கிராமங்களில் இப்போது பாசன வசதிக்காக 211 கிணறுகள் உள்ளன. அவற்றில் 110 கிணறுகளுக்கு மின்சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

சோமங்கலம் பகுதியிலுள்ள சுமார் 1,000 குடும்பத்தினர் புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் புதிய விவசாய முறைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். உடனடியான மதிப்பீடு இத்திட்டத்தின் ஓர் அம்சமாக விளங்கும்.

கால்நடைகளின் கலப்பு இன வளர்ச்சிக்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் சுமார் 5,500 கால்நடைகள் உள்ளன.

அண்மையில் இப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் உதவி 25 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இங்குக் கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகள் இரண்டும், விவசாயத் துறைச் சங்கங்கள் இரண்டும் உள்ளன.

சொர்ணவாரி ரக நெல் சாகுபடிக்குத் தேவையான இரசாயன உரங்கள் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள 10 கிராமங்களில் 8 கிராமங்களில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மாடுகளுக்குப் போதுமான தீவனமும் வழங்கப்படும்.

இங்கு 98 சிறிய விவசாயிகளும், 202 மிகச் சிறிய விவசாயிகளும் உள்ளனர். இவர்கள் கோழிப்பண்ணைகள் ஆரம்பிப்பதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் 10 கோழிகள் வழங்கப்படும்.

ஜெய்....

இங்கு நடத்தப்பட்ட ஆய்வின்படி கொல்லைப்புற கோழிப் பண்ணைக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

இப்பகுதியில் இந்த ஆண்டு மே மாதத்தில் பால்வாடிகள் துவக்கப்பட்டு குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்கப்படும். ஆரம்பச் சுகாதார நிலையங்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பால்வாடிகள் செயல்படும். குழந்தைகளின் கல்வி வசதிக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

சோமங்கலத்துக்கும் தாம்பரத்துக்குமிடையே விரைவில் சாலை போடப்படும். கிராமப் போக்குவரத்து அளவு மதிப்பிடப்பட்டவுடன் சிறிய பஸ்களும் விடப்படும்.

இங்குக் கைத்தொழில் தெரிந்தவர்களுக்குப் பாய் பின்னுதல், தையல், தீப்பெட்டித் தொழிற்சாலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் திட்டமும் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சோமங்கலம் கிராமத்தில் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட ஊரகச் சீரமைப்புத் திட்டத்தைத் தொடர்ந்து-அக்கிராமத்தின் முன்னாள் கைதிகளுக்குச் 'சுயவேலைவாய்ப்பு' ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக்குற்றவாளிகள் சீர்திருத்தத் துறையினர் விரைவில் ஒரு திட்டத்தை அமல்படுத்துவர்; இதற்கு வர்த்தக வங்கிகள் துணைபுரியும்.

இந்தச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இளங்குற்றவாளிகளும் சீர்திருத்தப்பள்ளியிலிருந்து விடுதலையாகி வருபவர்களும் பயன்படுத்தப்படலாம் என்று தெரிகிறது.

இந்த மறுமலர்ச்சித் திட்டத்தின்படி கிராமங்களிலும் சுகாதாரம், கல்வி, முதியோர் கல்வி, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பெருக்கம், புதிய தொழில்கள் ஆகியவை தொடங்குவதற்கான தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்படி இன்னும் மூன்றாண்டுகளில் இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதத்திற்கு 400 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைக்கும்.

இனிய வாழ்வு மலர்ந்திட வந்த இருபது அம்சத் திட்டங்களில் ஒன்றான இந்தக் கிராமப்புற மறுமலர்ச்சித் திட்டம்—

பூத்துக்குலுங்கும் புதிய கிராமங்கள் உருவாகிட

புதுமைக்கோலம் எங்கணும் பூண்டிட

ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் படைத்திட

வழிவகுக்கும், வளம் சேர்க்கும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

## விரைந்து முன்னேறி வரும் நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்தைப் பெருக்குவதற்காகக் கூடலூரிலும், ஆனைக்கட்டியிலும், கல்லப்பாளையம், ஹள்ளிமாயாரிலும், தெங்குமரஹாடாவிலும் விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும். இவைகளின் உதவியால் மேலும் பத்தாயிரம் ஏக்கரில் விவசாயம் செய்ய ஏதுவாகும். இன்னும் கூடலூரில் 27 தடுப்பு அணைகளும் கட்டப்படும். சிறு விவசாயிகளுக்கு 200 மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்படும்.

மத்திய அரசின் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயில் ஆரம்பக் கட்டமாக 80 தோத்தர்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலத்தில் வேலை துவங்கியுள்ளது.

சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் உதகையில் உள்ள அரசினர் மருத்துவமனையில் கூடுதலாக 80 படுக்கைகள் போடுவதற்குக் கட்டடங்கள் கட்டுவதல்லாமல் கூடலூரிலும், தூனேரியிலும், நெல்லிக்கோட்டையிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டப்படும். மாவட்ட சுகாதார அலுவலருக்கு இரண்டு நடமாடும் சுகாதார வண்டிகளும் வழங்கப்படும்.

இந்த மாவட்டத்தில் சுமார் 3,000 ஏக்கர் நிலம் உபரியாக உள்ளது. இது நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் உள்ள சுமார் 6 இலட்சத்து 65 ஆயிரம் மக்களுக்கு 353 கடைகளின் மூலம் உணவுப்பண்டங்கள் வழங்கப்படுகின்றன. முதல் முறையாகக் கூடலூர் வட்டத்திலிருந்து சுமார் 350 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பகிரங்க மார்க்கெட்டில் விற்கப்படுகிறது.

கோத்தகிரியிலும், மஞ்சூரியிலும், உதகையிலும், கூடலூரிலும் மொத்த வியாபாரக் கடைகள் திறப்பதற்கும் இன்னும் நான்கு கிடங்குகள் கட்டுவதற்கும் நுகர் பொருள் வாணிபக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மாவட்டத்திலிருந்து வேறு மாநிலங்களுக்கு உணவுப் பொருள்கள் போகாதபடி உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் கூடலூரில் உள்ள எகுமாடு என்னும் இடத்திலும், குன்னூரில் உள்ள பாரதி நகரத்திலும் அரிசனங்களுக்கென 19 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

உதகையில் உள்ள ஏரியை அழகுபடுத்துவதற்கென மலைப் பிரதேச வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிராணி நல சங்கத்தினரால் உதகை ஏரிக்கு அருகாமையில் உள்ள இடத்தில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறுவர் அரங்கமும், விலங்குகள் தங்குவதற்குச் சிறுசிறு குடிசைகளும் கட்டப்படும்.

சித்தி அம்மாள் என்ற ஒரு தோதவப் பெண்மணிக்கு, நேர்த்தியான பூ வேலை செய்ததற்காக மத்திய அரசால் தேசிய விருது வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி தேசிய விருது ஒரு பழங்குடிப் பெண்மணிக்குக் கிடைப்பது இதுவே முதல் தடவை.

## உடல் ஊனமுற்றவர்களுக்கு தேசிய விருதுகள்

உடல் ஊனமுற்ற ஊழியர்களைக் கொண்டிருக்கும் மிகச் சிறந்த ஆறு தொழில் நிறுவன நிருவாகிகளுக்கும், மிகத் திறமை வாய்ந்த உடல் ஊனமுற்றவர்கள் 20 பேருக்கும் தேசிய விருதுகளைக் குடியரசுத் தலைவர் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்.

உடல் ஊனமுற்ற மக்களையும், அவர்கள் வேலைபார்க்கும் தொழில் நிறுவன நிருவாகிகளையும் ஊக்குவிப்பதற்கான முயற்சியாக, 1970 முதல் ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதுகள் இந்திய அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத கனரக மின் நிறுவனமும், சென்னை ஆர்மீனியன் தெருவியிலுள்ள பின்னி நிறுவனமும் இந்த விருதுகளைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஆர். கோபாலசுவாமி, திரு. சி. துரைசாமி, திரு டி.எஸ். வெங்கட்டராமன் ஆகிய உடல் ஊனமுற்ற ஊழியர் மூவருக்கும் இந்த ஆண்டு தேசிய விருது கிடைத்துள்ளது.

# செவ்வாய்ப்பேட்டைச் சிறப்பு



சக்கரத்தின் உதவியால் ஜாடி உருப்பெறுகிறது.




[illegible] நடை பெறுகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள செவ்வாப்பேட்டைக்கு ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. அந்தச் சிறப்பு என்ன தெரியுமா? நவீன மண்பாண்டப் பயிற்சி நிலையம் அங்கே அமைந்திருப்பது தான் அந்தச் சிறப்புக்குக் காரணம். இது தமிழ்நாட்டுக்கு மட்டும் அமைந்த நிலையமல்ல! தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் பயன்பட்டு வரும் வட்டாரப் பயிற்சி நிலையம் (Regional Training Centre) ஆகும் தமிழ்நாடு காதி வாரியத்தின் நிர்வாகத்தில் இயங்குவது இது.

எல்லா மாநிலங்களிலிருந்தும் இந்த நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் வருகின்றனர். 9-12-1963-ல் துவக்கப் பெற்ற இந்தப் பயிற்சி நிலையம் இதுவரை 600-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது.

நாள்தோறும் ஒருமணி நேரம் பாட வகுப்பும் (Theory Class) ஐந்து மணி நேரம் பயிற்சி வகுப்பும் (Practical) நடைபெறுகின்றன. இங்குப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 90 உதவித்தொகை (Stipend) வழங்கப்பட்டு வருகிறது. இங்கே பயிற்சி பெறும் மாணவர்கள், கட்டாயம் விடுதியில் தங்கவேண்டும் என்று விதி உள்ளது குறிப்பிடத்தக்கது.

பயிற்சியாளர் பயிற்சி பெறும் துறைகள்.

சக்கர வேலை (Wheel Work),

உருவாக்குதலும் தயாரித்தலும் (Costing & Processing),

தரை ஓடுகள், மங்களூர் ஓடுகள், குழாய்கள் தயாரிப்பு

அரக்குப் பூசுதல்

பளபளப்புத் தீட்டுதல் (Glazzing)

சூளையில் சுடேற்றுதல் (Firing Work)

பயிற்சிக்காலம் 5 மாதங்கள்; பயிற்சி முடிவுற்றதும் காதி கிராமத்தொழில்குழுவின்(Commission) மண்பாண்டத்துறை இயக்குநர், பயிற்சித்துறை இயக்குநர் ஆகியோரின் கையொப்பங்களுடன், காதி கிராமத் தொழில் குழுவின் (Commission) முத்திரையும் இடப்பெற்ற சான்றிதழ்கள், பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில், பண்ருட்டி, தேன்பொத்தை, செவ்வாப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. என்றாலும் செவ்வாப்பேட்டைப் பயிற்சி நிலையந்தான் மிகுந்த புகழுடனும், முன்னேற்றத்துடனும் விளங்குகிறது.

இங்கு பயிற்சி பெற்று, வெளியே சென்ற பல மாணவர்கள் பலவகை நிறுவனங்களிலும் பணிபுரிந்து வாழ்க்கைப் பாதையில் பீடுநடை போட்டு வருகின்றனர். சிலர் தனியார் நிறுவனங்களிலும், சிலர் வடலூர் பீங்கான் தொழில் நிறுவனத்திலும், சிலர் பாண்டிச்சேரி பீங்கான் நிறுவனத்திலும் பணிபுரிந்து வருகின்றனர். வேற்று மாநிலத்திலிருந்து பயிற்சி பெற்ற சிலர், அவர்களது மாநிலங்களில் உள்ள அரசுத்துறை நிறுவனங்களில் அலுவலில் உள்ளனர்.

மின் விசையால் இயக்கப்படும் ஷீலா சக்கரம் என்னும் கருவியின் உதவியால் மண்பாண்டம் செய்வோரின் உழைப்பு இலகுவாக்கப் படுகிறது. இந்தச் சக்கரத்தினால் உற்பத்தியும் பெருகுகிறது. இந்தச் சக்கரத்தை இயக்குவதற்கு இங்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மண்பாண்டத்தொழிலாளர்கள் இந்தக் கருவியை வாங்குவதற்குக் கடனுதவியும் மானியமும் வழங்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. இது உற்பத்தி நிலையமாகவும் திகழ்கிறது. இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் பயிலவும் செய்கின்றனர்; அதே நேரத்தில் பொருள்களை உருவாக்கவும் செய்கின்றனர்.

5 மாதப் பயிற்சியில், முதல் மூன்று மாதங்களில், பயிற்சியாளர்கள் உருவாக்குகின்ற மண்பாண்டப் பொருள்களை, உற்பத்திக் கணக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடாது. நான்காவது ஐந்தாவது மாதங்களில், பயிற்சியாளர்கள் உருவாக்குகின்ற பொருள்கள்தாம் பயனுள்ளவைகளாகவும், தரமானவையாகவும் அமைகின்றன. அவைதாம் விற்பனைச் சந்தைக்கு அனுப்புவதற்குரிய தகுதியைப் பெறுகின்றன.

ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

பெரிய அளவுப் பூத்தொட்டிகள் சிறிய அளவுப் பூத்தொட்டிகள், தரையில் பதிக்கும் சதுர வடிவ ஓடுகள், கூஜாக்கள், குளிர் தண்ணீர்ப் பாண்டம் (Water Cooler), அடுக்கு ஜாடி ஆகியவை குறிப்பிடத்தக்கன. களிமண்ணினாலும் இவை செய்யப்படுகின்றன. பீங்கானிலும் செய்யப்படுகின்றன. பீங்கானிலே செய்யப்படும்போது, அவை மெருகேற்றப்படுகின்றன.

அரை லிட்டர் கொள்ளளவிலிருந்து 16 லிட்டர் கொள்ளளவுள்ள பீங்கான் தொட்டிகள் இங்கே உருவாக்கப்படுகின்றன.

கூரைகளில் வேய்வதற்குப் பயன்படும் மங்களூர் ஓடுகளும் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

இயற்கை வெளிச்சம் தருவதற்குரிய சிறப்பு வகைக் கண்ணாடி ஓடு வகையும் இங்கே தயாரிக்கப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு 1500 ஓடுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த ஓடுகள் பயிற்சியாளர்களால் தயாரிக்கப்படுவதால் இவற்றின் விலை மிகவும் மலிவாக உள்ளது. ஆயிரம் ஓடுகளின் விலை ரூ. 200. இந்த ஓடுகளில் சில, ஓரங்களில் சேதமடைவதுண்டு. இவ்வகை ஓடுகள் ஆயிரம், ரூபாய் 150-க்குக் கொடுக்கப்படுகின்றன.

களிமண் படிவங்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவை அச்சு வடிவங்களுக்குள் ( Dye ) வைத்து அழுத்தப்படுகின்றன. பின்னர் ஒரு வாரம் தனியறையிலும், மற்றொரு வாரம் வெளியிலும் வைக்கப்பட்டு உலர்த்தப்படுகின்றன. அதன் பின்னர் சூளைக்குள் வைக்கப்பட்டு, 8 மணி நேரத்திலிருந்து 10 மணி நேரம் வரை சூடேற்றப்படுகின்றன. மறுநாள் சூளையிலிருந்து எடுக்கப்பட்டு, வெளியே 3 அல்லது 4 மணி நேரம் உலர்த்தப்படுகின்றன.

இந்த நிலையத்தில் ஒரே ஒரு சூளைதான் இருக்கிறது என்றாலும் கூட இதன் பணி மகத்தானதாக விளங்குகிறது. மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது என்னும் மொழி இந்த நிலையத்திற்குப் பொருத்தமானது.

களிமண்ணினாலும், பீங்கானினாலும் தயாரிக்கப்படும் பொருள்கள் இந்தச் சூளைக்குள் வைக்கப்பெற்று 1160 டிகிரி செண்டிகிரேட்டிலிருந்து 1200 டிகிரி செண்டி கிரேட் வரை. பொருள்களுக்குத் ( Objects ) தக்கவாறு ஏறக்குறைய 24 மணி நேரத்திலிருந்து 30 மணி நேரம் வரை சூடேற்றப்படுகின்றன. சூடேற்றப்பட்ட பொருள்கள் குளிர்வதற்கு 48 மணி நேரம் தேவைப்படுகிறது. பொருள்கள் சரியானபடி சூடேற்றப்பட்டுள்ளனவா என்பதைச் சோதனைத் துண்டுகளின் (Test Pieces) உதவியால் தெரிந்து கொள்கிறார்கள். வண்ணம் தீட்டப் பெறும் பீங்கான் பொருள்களைச் சூடேற்றும்போது மிகுந்த எச்சரிக்கை வேண்டும். சூளைக்குள் உருவாகும் புகை, பொருள்களைத் தாக்கினால், அவற்றின் வண்ணம் சிதைந்துவிடும்; ஆதலால் பொருள்களைச் சூடேற்றும்போது மிகுந்த கவனம் வேண்டும்.

இந்தப் பயிற்சி நிலையம் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சி தரும் சிறந்த நிலையமாக விளங்குவதுடன், மிகச் சிறந்த உற்பத்தி நிலையமாகத் திகழ்வது பெருமைக்குரியதாகும். அதிலும் இராட்சத இயந்திரங்களின் உதவியால் மாபெரும் தொழிற்சாலைகள் தயாரித்தனுப்பும் பொருள்களுக்கு இணையான பொருள்களை, இந்த நிலையம் சிறுவகை இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்வது, மிகப் பெரும் சாதனை என்றே கூறலாம்.

**— எஸ். சண்முகசுந்தரம்.**



மங்களூர் ஓடு வடிவம் பெறுகின்றது.



விற்பனைக்குத் தயாராக உள்ள ஜாடிகள்.







ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த பலன்களை விரைந்து அளிக்கக் கூடிய மருந்து வகைகளையும் மருத்துவக் கருவிகளையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்து தந்தால் நல்லதாயிற்றே என்று நமது பாரத அரசு எண்ணியது.

அந்த உயரிய நோக்குடன் தான் பொதுத்துறையில் 'ஐ.டி.பி.எல்.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் 'இந்தியன் ட்ரக்ஸ் அண்ட் பார்மசியூட்டிகல் லிமிடெட்' என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குத் தேவையான ஒத்துழைப்பைக் கொடுக்க சோவியத் ரஷ்ய நாடும் முன்வந்தது.

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 'இந்தியன் டிரக்ஸ் அண்ட் பார்மசியூட்டிகல் லிமிடெட்'-என்னும் நிறுவனம் தோன்றியது.

அதற்கு முன்பே, தடுப்பு மருந்துகள், கலவை மருந்துகள், அறுவை சிகிச்சைக் கருவிகள், தாவர இரசாயனப் பொருள்கள், சுரப்பிகள் சம்பந்தப்பட்ட பொருள்கள் முதலானவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அமைக்கும் நோக்கத்துடன், சோவியத் ரஷிய அரசாங்கத்தோடு 1959-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் நமது பாரத அரசு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்து கொள்ளவும் அவற்றில் இந்தியர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிபுணர்களை ரஷ்ய நாட்டிலிருந்தே வரவழைத்துக் கொள்ளவும் செலவு செய்து கொள்வதற்காக 9.52 கோடி ரூபாய் கடனுதவி வழங்கவும் அந்த நாட்டு அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

முதலில் 'தேசியத் தொழில் வளர்ச்சிக் கழகம்' தான் ( National Industrial Development Corporation ) இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டது. பிறகுதான் 'ஐ.டி.பி.எல்' அமைக்கப்பட்டு சோவியத் நாட்டோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட அத்தனை உரிமைகளையும் கடமைகளையும் 1961 நவம்பர் மாதத்தில் இந்த நிறுவனத்திடமே பாரத அரசு ஒப்படைத்தது.

**அமைப்புமுறை**

ஐ. டி. பி. எல். நிறுவனத்தின் தலைமை நிலையம் புதுடில்லியில் இருக்கிறது. இந்த நிறுவனத்தின் கீழ் மூன்று உற்பத்தி நிலையங்கள் நடைபெறுகின்றன.



1. நோய்த்தடுப்பு மருந்து (ஆண்டிபயடிக்ஸ்) உற்பத்தி நிலையம், ரிஷிகேஷ்.

2. சிந்தெடிக் மருந்துகள் உற்பத்தி நிலையம், ஐதராபாத்.

3. அறுவைச் சிகிச்சைக் கருவிகள் (சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ்) உற்பத்தி நிலையம் சென்னை.

இந்த மூன்று தொழிற்சாலைகளுக்கும் ஆரம்பத்தில் ரூபாய் 50.66 கோடி வரை முதலீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இன்னும் புதிய பல வேலைகளைத் தொடங்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இந்த முதலீட்டுத் தொகை ரூ. 55.15 கோடியாக மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

**நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம், ரிஷிகேஷ்**

ஆண்டுதோறும் ஏறத்தாழ 290 டன்கள் நோய்த்தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு 'ஆண்டிபயடிக்ஸ் பிளாண்ட்' என்னும் பெயரில் ஒரு மருந்துத் தயாரிப்பு நிலையம், ரிஷிகேஷில் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் செலவுக்கான முதலீட்டுத்தொகை ரூ. 27.50 கோடியாகும்.

இந்தத் தயாரிப்பு நிலையத்தின் அமைப்பு வேலை 1962-இல் ஆரம்பிக்கப்பட்டு 1968-இல் முடிவடைந்தது.

இன்றியமையாத பல மருந்துப் பொருள்கள் எல்லாம் இங்கே

தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் சில வருமாறு:

'ஸ்ட்ரெப்போமைசிடின் சல்பேட்',

'மெட்ராசைக்லின் கேப்சூல்ஸ்'

'குளோரோம்பெனிகல் இன்ஜெக்ஷன்',

'குளோரோம்பெனிகல் கேப்சூல்ஸ்'

'பென்சைல் பென்சிலியன் சோடியம்',

'ஆம்பிசில்லியன் கேப்சூல்ஸ்'

'ஆம்பிசில்லியன் இன்ஜெக்ஷன்',

'டெட்ராசைக்லின் கேப்சூல்ஸ்'

அ·ட் சிம் (OTCIM)

—இன்னும் பல.

இந்த மருந்துகளின் உற்பத்தி வேகத்தை ஆண்டுதோறும் உயர்த்திக்கொண்டே வருகிறது ரிஷிகேஷ் மருந்துத் தயாரிப்பு நிலையம்.

**'சிந்தெடிக் டிரக்ஸ் உற்பத்தி நிலையம்' ஐதராபாத்**

1962-ஆம் ஆண்டு சிந்தெடிக் மருந்துகள் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1968-ல் முடிவடைந்தன.

இந்தத் திட்டத்திற்கான முதலீட்டுத் தொகை ரூபாய் 22 கோடியாகும்.

ஏறத்தாழ 850 டன்கள் வரை மருந்துகளைத் தயாரிக்கும் வகையில் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விரைவாகக் குணம் அளிக்கக் கூடிய பல மருந்துகள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

அவற்றில் ஒரு சில வருமாறு:

'அனுல்ஜின்' மாத்திரைகள்

'செமிசால்' மாத்திரைகள்

'ஹெச்சாவிட்ஸ்' மாத்திரைகள்

'வைட்டமின் 'பி' காம்பளக்ஸ்' மாத்திரைகள்

'வைட்டமின் 'சி' சூவபிள்' மாத்திரைகள்

'சல்பாகுனோடின்' மாத்திரைகள்

'சல்பாடைமிடைன்' மாத்திரைகள்

சக்ரீ

—இன்னும் பல.

ஆண்டுக்கு ஆண்டு இவற்றின் தயாரிப்புச் சக்தியும், விற்பனை வேகமும் அதிகமாகிக் கொண்டே வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**'அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம், சென்னை**

அலோபதி மருத்துவ முறையில் அறுவை சிகிச்சை தலையாய இடத்தினை வகிக்கிறது. அதற்கு உபயோகப்படத்தக்க பல கருவிகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன், சென்னையில் இந்தத் தயாரிப்பு நிலையம் ரூபாய் 4.65 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

1965 செப்டம்பர் மாதத்திலிருந்து இந்தத் தயாரிப்பு நிலையம் கருவிகளை உற்பத்தி செய்வதற்குத் தொடங்கியது.

ஏறத்தாழ இருபத்தைந்து இலட்சம் கருவிகளைத் தயாரிக்கும் அளவுக்கு இதனுடைய உற்பத்தித் திறன் அமைந்துள்ளது. இதிலே தயாரிக்கப்படும் கருவிகள், மருத்துவத் துறையில் பல பிரிவுகளுக்குப் பயன்படுவதாக உள்ளன.

கண் சிகிச்சை, காது சிகிச்சை, பல் சிகிச்சை, நரம்பு சிகிச்சை முதலான பல மாதிரியான சிகிச்சைகளுக்கும் அக்கருவிகள் சிறந்த முறையில் பயன்படுகின்றன.

ஒரே நாளில் 1,900 முதல் 2,000 கருவிகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு இந்தத் தயாரிப்பு நிலையத்தின் ஆற்றல் அமைந்திருக்கிறது.

**தலை சிறந்த சாதனைகள்**

நம்முடைய பாரத நாட்டில் தனியார் துறைகளோடு போட்டியிட்டு அதிக வருமானத்தை அடைகின்ற வகையில் பொதுத் துறை நிறுவனங்கள் தழைக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது 'ஐ.டி.பி.எல்.' நிறுவனம்.

ஏற்படக்கூடிய இழப்புகளையெல்லாம் ஈடுகட்டி இலட்சக்



கணக்கில் இலாபங்களை ஈட்டவும் முடியும் என்று நிரூபித்து வருவதே இந்த மத்திய அரசு நிறுவனம்.

இதுகாறும், தன்னுடைய நிருவாகத்தின் கீழேயுள்ள உற்பத்தி நிலையங்களில் தயாராகும் மருந்துகள்-சிகிச்சைக் கருவிகள் ஆகியவற்றின் விற்பனை மூலம் கடந்த 1974-75 ஆண்டில் மட்டும் ஏறத்தாழ இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாய் வரை நிகர இலாபம் கிடைத்திருக்கிறது.

இதனுடைய விற்பனை வேகம் உண்மையிலேயே நம்மை மலைக்கும்படி செய்கிறது. அடியிற் காணும் விவரங்களின் மீது சிறிய கண்ணோட்டம் செலுத்தினாலே இதனைத் தெளிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

| ஆண்டு | மொத்த விற்பனை (இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|
| 1969—70 | 481.11 |
| 1970—71 | 1,379.42 |
| 1971—72 | 2,335.79 |
| 1972—73 | 2,792.92 |
| 1973—74 | 2,766.63 |
| 1974—75 | 4,584.45 |

கடந்த 1974-75-ஆம் ஆண்டில் மட்டும் முந்தின ஆண்டைவிட 65.7 சதவீதம் அதிக விற்பனை ஆகியிருக்கிறது.

மருந்துகளைப் பொறுத்தமட்டில் அனால்ஜின், வைட்டமின் பி-2, போலிக் ஆசிட், நிகோடினமைட் ஆகியவை சென்ற ஆண்டில் மிக உச்சமான அளவில் விற்பனை ஆகியிருக்கின்றன.

'ஐ. டி. பி. எல்' நவீன மருந்து வகைகள் சிலவற்றையும் அறிமுகம் செய்து ஒரு சரித்திரச் சாதனையையும் உருவாக்கிக் கொண்டுள்ளது.

எம்டோபா' (Emdopa)

'கம்பேபா' (Compeba)

'செபக்சின்' மாத்திரைகள் (Cebexin Tablets)

'ஆம்பிசில்லின்' ஊசிமருந்துகள் (Ampicillin Injections)



'ஆம்பிசில்லின்' கேப்சூல்ஸ் (Ampicillin Capsules).

ஐதராபாத்தில் உள்ள 'சிந்தெட்டிக் மருந்துகள் தொழிற்சாலை' யின் தற்போதைய உற்பத்தித் திறன் 1,988 டன்கள் ஆகும்; அதனை 3,386 டன்களாக உயர்த்துவதற்கு ரூ.21.2 கோடிக்கு மத்திய அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

**தென் மண்டலத்தின் சிறப்பான பங்கு**

'ஐ. டி. பி. எல்' நிறுவனத்தின் மாபெரும் சாதனைகளில் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களும் இணைந்த தென் மண்டலம் (Southern Region) தனக்கென்று தனி முத்திரை பொறித்துள்ளதையும் குறிப்பிடவே வேண்டும்.

இதனுடைய அலுவலகம் முதலில் ஒரு சிறிய கட்டடத்தில் தான் சென்னை-கீழ்ப்பாக்கத்தில் இருந்தது. ஆனால் மருந்துகளின் உற்பத்தி வேகமும்-விற்பனை வேகமும் வளர வளர அலுவலக வேலைகளும் அதிகமாகிவிட்டன. எனவே, சென்னையில் இருதயப் பகுதிபோன்ற அண்ணாசாலையில் ஒரு முக்கியமான இடத்திற்கு 'ஐ. டி. பி. எல்.' லின் தென் மண்டலக் கிளை மாற்றப்பட்டுச் சுறுசுறுப்போடு இன்று இயங்கி வருகிறது.

இதனுடைய சீரான பணிகளை அலுவலகத்தில் தொங்கவிடப்பட்டுள்ள 12 தகுதிச் சான்றிதழ்களே (Certificates of Merit) அழகாகப் பறைசாற்றுகின்றன.

அலுவலகம் அமைந்துள்ள முதல்மாடியில் அடி வைத்ததுமே இந்தச் சான்றிதழ்களே நம் விழிகளைக் கவர்ந்து வரவேற்கின்றன.

'அபிடின்', 'ஹெச்சாவிட்' 'செமிசால்' முதலான மருந்துகளின் விற்பனையில் மட்டுமின்றி, புதிய மருந்துகள் விற்பனை, மொத்த விற்பனை போன்ற பல சாதனைகளுக்காகவும் அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள மற்ற மண்டலங்களைவிட பொதுவாக மிகச் சிறந்த பணியாற்றியமைக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து சுழற்கோப்பைப் பரிசை (Rolling Trophy) தட்டிக் கொண்டு வந்துள்ள பெருமையும் இந்தத் தென்மண்டலத்தையே சாரும்.

இந்தப் வட்டாரத்தில் மட்டும் 1970-71-ல் ரூ. 75 இலட்சம் விற்பனையான நிலைமை மாறி 1974-75-இல் ரூ 380 இலட்சத்திற்கு விற்பனை கூடியிருக்கிறது; இது ஒரு மகத்தான சாதனை என்பதில் சந்தேகமே இல்லை.

நாட்டின் தென்பகுதியில் 'ஐ. டி. பி. எல்' மிக விரைவாக ஆக்கப்பணிகளை ஆற்றிப் பரிசுகளையும், விருதுகளையும் தட்டிக் கொண்டு வருவதற்கு அந்த நிறுவனக் கிளை அலுவலகத்தில் பணியாற்றும் அத்தனை பேருடைய அயரா உழைப்பே காரணம் என்றால் மிகையாகாது.

அதிலும், அண்மைக் காலம் வரையில் சென்னையில் 'டிவிஷனல் மானேஜர்' ஆககப்பணியாற்றிய திரு. பி.வி. வெங்கடேசுவரன் அவர்கள் செயல்படுத்திய சில திட்டங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். அவர் இப்போது அகில இந்தியாவுக்குமே 'மார்க்கெட்டிங் ஆபரேஷன் மானேஜர்' ஆகப் பதவி உயர்வு பெற்றுப் புதுடில்லிக்குப் போயிருக்கிறார்.

தற்போது தற்செயலாகச் சென்னைக்கு வந்திருந்த அவரைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிட்டி விசாரித்தபோது, அவர் வெளியிட்ட கருத்து வருமாறு: ''முதலில் விநியோக முறையை ஒழுங்குபடுத்தினோம்; மொத்த மருந்து விநியோகஸ்தர்களிடம் எங்கள் நிறுவனத்தின் தொடர்புகளை வலுப்படுத்தினோம்; பொது மார்க்கெட்டில் மக்களைக் கவரும் வகையில் மருந்து விற்பனையைப் பெருக்கி வருகிறோம்; அத்துடன் நில்லாமல் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்; தனிப்பட்டவர்களுடைய மருத்துவ மனைகளுக்கும் எங்கள் மருந்துகளை வாங்குமாறு செய்திருக்கிறோம்.

''எங்களுடைய நிறுவனம் இருதய நோய், நரம்புத்

தளர்ச்சி முதலான நோய்களுக்கும் நவீன மருந்து வகைகளைத் (Sophisticated Drugs) தயாரிப்பதிலும் இப்போது நாட்டம் செலுத்தி வருகிறது. அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கிக் கொள்வதற்குத் தமிழ் நாடு அரசாங்கம் அளித்து வரும் ஒத்துழைப்பை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. எங்கள் நிறுவனம் சமுதாயப் பொது நன்மையையும் கருத்தில் கொண்டே நடந்து வருகிறது. அந்தப் பொதுநோக்கின் அடிப்படையில்தான் இந்த மாநிலத்தில் வறட்சிக் கொடுமை வந்த போது இரண்டு இலட்சம் அளவிற்கு 'மல்டி வைட்டமின்' மாத்திரைகளையும் 'பி. காம்ப்ளக்ஸ்' மாத்திரைகளையும் நன்கொடையாகவே வழங்கினோம்'' என்று அடக்கமாகவே கூறிக் கொள்கிறார் அவர்.

தற்போது சென்னையில் ஏரியா மானேஜராக உள்ள திரு. ஏ. வி. கண்ணன், திரு. ஜே. சீனிவாசன், திரு. ஏ. வி. பாலகுமார் முதலானவர்களும் தங்கள் கிளையின் வளர்ச்சி பற்றிய தகவல்களை ஆர்வத்துடன் நமக்குக் கூறுகின்றனர்.

**உழைப்பால் உயரும் நிறுவனம்**

''கடின உழைப்பு—கட்டுப்பாடு-தெளிந்த கண்ணோட்டம்—திடசிந்தனை—இவையே நம் நாட்டினை உயர்த்தும் ஒரே மந்திரம்'' என்றார் நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்.

அவருடைய அந்த ஒரே மந்திரத்தைக் கடைப்பிடித்து டாக்டர் எல். கே. பெஹல் அவர்களின் நிருவாகத் தலைமையின் கீழ் நிமிர்ந்து நடைபோடுவதே 'ஐ. டி. பி. எல்.' நிறுவனம்.

''கோடிக்கோடி மக்களுக்கும் கொடுப்போம் மருந்துகள்'' (Medicines for the Millions) என்பதையே தாரக மந்திரமாகக்கொண்ட இந்த நிறுவனம் இன்னும் பல சாதனைகளைப் புரியும் என்று உறுதியாக நம்பலாம்.

—அ. வேதாசலம்

# தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தம்



தமிழ் நாட்டில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் தேசிய வழிமுறைகளிலிருந்து சிறிது பிறழ்ந்த நிலை தற்போது உள்ளது. தமிழ் நாட்டின் நிலச்சீர் திருத்தச் சட்டத்தை தேசீய விதிமுறைகளுக்கு ஏற்ற வகையில் ஆக்குவதற்கான சட்ட நடவடிக்கைகளைப் பற்றித் தமிழ் நாடு அரசு ப்ரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

விசாரணைக்கு வரக்கூடிய புதிய பிரச்னைகளைச் சமாளிப்பதற்காகச் சிறப்பு தீர்ப்பு மன்றங்களை (Tribunals) அமைக்கவும் அரசு கருதியுள்ளது.

நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக இது வரையில் அறிவிக்கப்பட்டுள்ள பரப்பு 1,12,473 ஏக்கர். இதில் 92,511 ஏக்கர் நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளது. அதில் 68,970 ஏக்கர் நிலத்தை 41,444 பேர்களுக்கு ஒப்படை செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1969-ஆம் ஆண்டின் குத்தகை உரிமை பற்றிய தமிழ் நாடு வேளாண்மை நிலப்பதிவேடுகள் சட்டத்தின் கீழ் 4,01,808 குத்தகைதாரர்கள் பதிவுசெய்யப்பட்டனர். பதிவு செய்யப்பட்ட பரப்பளவு 6,03,957 ஏக்கர்.

1972-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட பட்டா 'பாஸ் புத்தகத்' திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரையில் 104 இலட்சம் பட்டா புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நில உச்ச வரம்புச் சட்ட அதிகார வரம் பின்கீழ், பழத்தோட்டங்கள், சீதனமாக உள்ள நிலங்கள் அல்லது வயது வராதவர்களுக்குக் (மைனர்) கொடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்கான சட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது.

மத்திய அரசு வழங்கியுள்ள தேசீய வழிமுறைகளுக்கு இசைவாக இருக்கும் நிலையை இது ஏற்படுத்தும்.

நிலச் சீர்திருத்தம் தொடர்பான 115 'ரிட்' மனுக்களும், 24 சிவில் 'ரிவிஷன்' மனுக்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் இப்போது தீர்த்து வைக்கப்படாமல் இருக்கின்றன. ஏறத்தாழ எல்லா மனுக்களிலும் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் பற்றி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் ஒன்பதாம் பிரிவில் அவற்றைச் சேர்ப்பது நல்லது.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைத்த உபரி நிலத்தை ஒப்படையாகப் பெற்றவர்களுக்கு மத்திய அரசு நிதி உதவி அளித்திட வேண்டும்.

—தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள், 6.3.76 அன்று புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசியது.



# நிழல்

④

"நான் பொறுமை இழந்திட்டேன். என் பலம் கொண்ட மட்டும் அடிச்சேன். ஆத்திரம் தீருமட்டும் அவளை அல்லல் படுத்தி அவ தலை முடியைப் பிடிச்சு இழுத்தேன். நீ செத்தாலும் முத்துவைத்தான் அடைவேன்னு சொல்ற முத்து இந்த அறைக்குள்ளேதான் இருக்கான், நீயும் அவன்கிட்டேயே போய்ச் சேருன்னு, முத்து தூக்குப் போட்டுச் செத்த அறைக்குள்ளே தள்ளிக் கதவைச் சாத்திட்டேன்.

"வீட்டுக்கு உபயோகப்படாத சாமான்களையெல்லாம் அந்த அறையிலே போட்டுப்பூட்டி வைச்சிருந்தோம். வெளிச்சமும் காற்றும் புகாத அந்த இருட்டறைக்குள்ளே மரகதத்தைத் தள்ளினதும் ''அத்தை, அத்தை'' என்னைக் காப்பாற்று. எனக்குப் பயமா இருக்கு. என்னைக் காப்பாற்று. தேளும் கரப்பானும் என்னைச் சுத்தி வருதுன்னு கத்தினா, கதறினா, கெஞ்சினா, தவிச்சா.

"நான் சொல்றதைக் கேட்கறேன்னு சொல்ற வரைக்கும் உனக்கு அதுதான் தண்டனை''. என் மனதைக் கல்லாக்கிட்டுக் கதவைத் திறக்கவே இல்லே.



பட்டுக்கோட்டை குமாரவேல்

''பகல் பொழுது முழுதும் மூத்து மூத்துன்னு புலம்பினு. செருமல் சப்தம் கேட்டுக்கிட்டே இருந்தது. அப்புறம் சப்தமே இல்லே. தூங்கிட்டான்னு; நாங்களும் படுத்தவங்க தூங்கிட்டோம். நடுஇரவு நேரம் இருக்கும். மரகதம் வீல்னு கத்தினு. அத்தை அத்தைன்னு துடிச்சா. தேள் எதுவும் கொட்டியிருக்குமோன்னு பயந்து கதவை திறந்தேன். மரகதம் மயங்கிக் கிடந்தா. கை கால்கள் கோணஇழுத்து விரைச்சுப் போச்சு. உடம்பைத் தொட்டுப் பார்க்கறபோது அது மனித உடம்பாத் தெரியலே. ஏதோ இரும்பைத் தொடறதைப் போல உணர்வு எனக்குப்பட்டுது. கண்கள் மூடியிருந்தன. வாயிலிருந்து நுரை நுரையா எச்சில் வந்தது. அறையை விட்டு வெளியே கொண்டு வந்து முகத்திலே தண்ணி தெளிச்சேன். வாயிலே தண்ணீர் ஊற்றினேன். பற்கள் கிட்டிப் போயிருந்ததாலே வாயிலே ஊற்றின தண்ணீர் கீழே வழிஞ்சுட்டுது. எனக்குப் பயம் அதிகமா போச்சு. உயிருக்கு எதுவும் ஆபத்து வந்திடுமோன்னு நினைச்சுட்டேன்.

''பக்கத்திலே உள்ளவங்களை ஆதரவுக்குக் கூப்பிட்டு டாக்டரைக் கூட்டி வரச் சொன்னேன். எனக்கு நெஞ்சுத்துடிப்பு அதிகமாப் போயி, உடம்பெல்லாம் வேர்த்துப் போச்சு. இன்ன கூ செய்றதுன்னு புரியாம ஆடிப் போயிட்டேன். டாக்டர் வந்து மரகதத்தைப் பரிசோதனை செய்தார். உயிருக்கு ஆபத்தில்லே, அதிர்ச்சி, பயம், ஏக்கம், இதனுலே மூளை நரம்பு பாதிக்கப்பட்டிருக்கு. நல்லா ஓய்வெடுத்தா சரியாப் போயிடும். இனிமே இந்த மாதிரியான சந்தர்ப்பங்களை எற்படாமே பார்த்துக்கணும்னு சொல்லி ஒரு ஊசி போட்டாரு. மருந்துகளையும் எழுதிக் கொடுத்தாரு.

''நல்ல காத்தோட்டமான இடத்திலே படுக்க வைச்சு அவளைக் காப்பாத்தினேன். அது வரைக்கும் கடவுள் என்னைக் காப்பாற்றினுர்.''

''மரகதத்திற்கும், உங்கள் மகன் மேகநானுக்கும் திருமணம் எப்போ நடத்துச்சு?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

''சொல்றேன்'' பெருமூச்சு விட்டபடி அந்த மூதாட்டி மறுபடியும் பேசினுர்.

''மரகதம் அந்த நிகழ்ச்சிக்கப்புறம் படிப்பை விரும்பிப் படிச்சா. பட்டம் பெற்றுக் கல்லூரிப் பேராசிரியராகக் கல்லூரியிலே பணியாற்றினுள். அவள் கல்லூரி மாணவிகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் பேராசிரியராளுளே தவிர, அந்தச் சம்பவத்திலிருந்து நான் அவளுக்குக் கொடுத்த சலுகையோ இல்லை பேராசிரியர் என்ற மமதையோ என்னவோ-யாரையுமே லட்சியம் செய்யாத கர்வியாகிட்டா.

''மரகதம் பேராசிரியரானதும், என் மகன் மேகனுதனும் மரகதமும் நெருங்கிப் பழக ஆரம்பிச்சாங்க. அவளையே திருமணம் செய்துக்குவேன்னு அவனும் பிடிவாதம் பிடித்தான் .

''என் மகன் மேகநாதன் நல்ல பையன். மரகதத்தின் குணம் தெரிந்த நான் எவ்வளவோ மறுத்தும் கேட்கலே. எல்லாம் விதிப்படி நடக்கும்னு நானும் சம்மதிச்சேன். திருமணம் நடந்தது. இருவரும் தம்பதிகளாகக் குடும்பம் நடத்தினுங்க.



## பரங்கிப் பேட்டையில் கலங்கரை விளக்கம்

தென்னுர்க்காடு மாவட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டையில் கலங்கரை விளக்கம் ஒன்றைக் கட்டுவதற்குத் தேவையான நிலத்தின் உரிமையை வழங்குமாறு தமிழ்நாடு அரசை மத்திய அரசு கேட்டுள்ளது. மொத்தச் செலவு 26 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமான வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

''அதுதான் இல்லே சப்இன்ஸ்பெக்டர் சார். நான் இந்த மரகதத்தை விரும்பித் திருமணம் செய்துக்கிட்டது உண்மை. ஆனு நான் அவளோடு ஒருநாள் கூடக் குடும்ப வாழ்க்கை நடத்தினதில்லே. ஆமாம் சப்-இன்ஸ்பெக்டர் சார். எனக்குத் திருமணம் நடந்து இத்தனை ஆண்டுகளுக்கப்புறம் என் மனத்திலே குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களைக் கொட்டித் தீர்த்தாத்தான் என் மனம் ஆறுதலடையும்!''

''உண்மைதான்!'' என்ருர் சப்-இன்ஸ்பெக்டர்.

''நான் திருமணம் செய்து கொண்ட மரகதம் இதுவரை எனக்கு வாழ்க்கைத் துணைவியாகத்தான் இருந்து கொண்டிருக்கிருளே தவிர ஒருநாள் கூட என் மனைவியா இருந்ததில்லே.''

''உண்மையாகவா?'' சப்-இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

''உண்மைதான் சப்இன்ஸ்பெக்டர்! வெட்கத்தைவிட்டுச் சொல்றேன். முதலிரவு அன்று சொர்க்கத்தைக் காணும் ஆவலில் விளக்கை அணைத்து அவளை அள்ளி அணைத்தேன். அவளும் என்னை ஆசையோடு அணைத்தாள். எங்கிருந்தோ காற்றில் மயக்கும் மணம் வந்தது. என் அருகில் படுத்திருந்த மரகதம் நாகம் சீறுவது போலப் பெருமூச்சு விட்டாள். துவண்ட மலரெனக் கட்டிலில் கிடந்த மரகதத்தின் உடல் இரும்பாக மாறியது. விரல்கள் அத்தனையும் விரைத்து நீண்டன. என்னை மயக்கிய இமைகள் திறந்து என்னை விழுங்கும் கண்களாக மாறின. கொஞ்சும் மொழி பேசிய வாய் கோரமாகச் சிரித்தது. மலர்க் கொடியென என்னை அணைத்திருந்த கரங்கள் இரும்புக்கரங்களாக மாறி என்னை இறுகப் பிடித்து என் கழுத்தை நெறிக்கப் பார்த்தன. அந்தக் காட்சியை இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சக் குருதி உறைந்துவிடும் போலிருக்கிறது.

''நான் 'வீல்' என்று கத்தினேன். மரகதத்தின் இரும்புப் பிடியிலிருந்து தப்பினேன். அவள் என்னைப் பிடித்துக் கொலை செய்யத் தொடர்ந்தாள். உடல் வியர்க்க, நெஞ்சம் துடிக்க எப்படியோ கதவைத் திறந்தேன். வெளியே வந்து, கதவைத் தாளிட்டேன். அவ்வளவுதான் தெரியும். அப்படியே மயங்கி விழுந்து உறங்கிவிட்டேன். பொழுது விடிந்தது. ஊமை கண்ட கனுப்போல, இரவு நடந்த இந்தச் சம்பவத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் தவித்தேன். இதுநாள் வரை நானும் மரகதமும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து விட்டோம்.''

''மரகதத்துக்கு மனநோயா இல்லை நரம்புக் கோளாறு என்று மருத்துவரிடம் காட்டிச் சிகிச்சை செய்ய நீங்கள் ஏன் முயற்சிக்கவில்லை?''

''அது மன நோயோ, அல்லது

நரம்புக் கோளாறே இல்லை சப் இன்ஸ்பெக்டர் சார். அவளைக் காதலித்துத் தற்கொலை செய்து கொண்ட முத்துவின் ஆவி அவளைப் பற்றிக் கொண்டிருக்கிறது. அவனைத் தவிர மற்ற எவரும் அவளிடம் இன்பம் அனுபவிக்க விரும்பாத முத்துவின் ஆவி, மேகநாதன் அவளிடம் இன்பம் அனுபவிக்க முயற்சிக்கும் போது வந்து மேகநாதனையே கொல்ல முயற்சிக்கிறது'' என்று மேகநாதனின் தாய் மங்களத்தம்மாள் குறுக்கிட்டு விவரமாகச் சொன்னாள்.

''ஆமாம் சப்-இன்ஸ்பெக்டர். அவளைப் பற்றிக் கொண்டிருக்கும் முத்துவின் ஆவிதான் இவ்வாறு செய்கிறது. இப்பொழுது சொல்லுங்கள். மரகதம் கொலைகாரியா அல்லது சூன்யக்காரியா? மரகதத்தால் நடக்கும் கொலைகளுக்கு என் மகன் மேகநாதன் உடந்தையா? யார் கொலை செய்தது? யார் குற்றவாளி?.''

''மேகநாதன் நிச்சயமாகக் குற்றவாளியே இல்லே. அந்த சூன்யக்காரி மரகதம்தான் கொலைகாரி. இந்தப் பங்களாவிலே நடந்த கொலைகளுக்கு எல்லாம் காரணம் அவள்தான். அவளுக்குள்ள நெஞ்சழுத்தமும் நேர்மையில்லா மனமும் இந்த உலகத்திலே எந்தப் பெண்ணுக்கும் இருக்கவே இருக்காது. அதனாலேதான் இந்த பங்களாவை விட்டு எங்களோடு கோயம்புத்தூருக்கு வராம இங்கேயே குடியிருக்கா. அவள் மேலே இருக்கற ஆவிக்கு அடிமைப்பட்டு அவ என்னையும், என் மகன் மேகநாதனையும் எந்தச் சமயமும் கொன்னுடுவாளோன்னு பயந்துதான் நான் எப்பொழுதுமே எச்சரிக்கையா இருக்கேன். இரவு நேரங்களிலே என் பையன் மேகநாதன் அவ இருக்கிற பங்களாவிலே இருக்க முடிவதில்லை.''

''இவ்வளவு பயங்கரமான உண்மையை மறைச்சு வைச்சு நீங்க எதுக்காக வாழ வேண்டும்? நல்ல மனநோய் மருத்துவரை அழைத்து வந்து காட்ட வேண்டியதுதானே?''.

''மருத்துவரென்ன சப்-இன்ஸ்பெக்டர் சார்! பெரிய பெரிய மந்திரவாதிகளை எல்லாம் அழைத்து வந்து காட்டினேன். மறைவாக மந்திரங்கள் எல்லாம் செய்து பார்த்தேனே!''

''மந்திரத்தாலே அந்தப் பேயை ஓட்ட முடியவில்லையா?''

''முடியவில்லையே! பேயை ஓட்டுறேன்னு அறைக்குள்ளே போன அந்த மந்திரவாதி, நான் இந்த திசைப்பக்கம் இனிமே வரவே மாட்டேன். என்னை விட்டுடுங்க. என்னை விட்டுடுங்கன்னு கதவைத் திறந்துகிட்டு தலைவிரி கோலமா ஓடி விட்டான். அதனாலே நீங்கதான் சப்-இன்ஸ்பெக்டர் எப்படியாவது இந்த சூன்யக்காரியைக் கைது செய்து தூக்கிலே போடணும். அவ உயிரோட இருக்கற வரை எங்களுக்கு வாழ்வு கிடையாது. நிம்மதியான தூக்கம்கூட இல்லே. ஏன் இங்கு வந்து தங்கும் இளம் தம்பதிகள் அத்தனை பேரும் உயிரோட திரும்ப முடியாது.''

''மரகதம் தான் சூன்யக்காரி. அவள்தான் இந்த பங்களாவிலே நடந்த கொலைகளையெல்லாம் செய்தாள் என்று நீங்க சொல்றதை நானும் நம்புகிறேன். ஆனா''....

''ஆனா...என்ன சப்-இன்ஸ்பெக்டர் சார்?. உங்களுக்கு நம்பிக்கை வந்தவுடனே கைது செய்து தூக்கிலே போட வேண்டியது தானே!'' மரகதத்தின் கணவர் மேகநாதனும், அவர் தாய் மங்களமும் உணர்ச்சி வசப்பட்டு பரபரப்போடு சொன்னார்கள்.

கட்டிய மனைவியைக் கைது செய்யச் சொல்லி மேகநாதன் தூண்டிக் கொண்டிருக்கிறார். கட்டிக் காப்பாற்ற வேண்டிய மருமகளைக் கைது செய்து உடனே தூக்கிலிட வேண்டுமென்று மாமியார் மங்களத்தம்மாள் துடிக்கிறாள். நகமும் சதையுமாக வாழ வேண்டிய தம்பதிகளும், தாயும் மகளுமாக வாழ்ந்து வந்த மங்களமும் ஏன் மாறுபட்டார்கள்? ஏன் அவர்களுக்கு இந்த மனமாற்றம் ஏற்பட்டது? எது அவர்கள் மனத்தை மாற்றியது? மரகதத்தின் மீது கணவன் மேகநாதன் காட்டும் அன்பும், மருமகள் மீது மாமியார் மங்களத்தம்மாள் காட்டிய பாசமும் சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் சிந்தனையைத் திசை திருப்பி விட்டன.

மேகநாதனைக் கைது செய்யாமல் அவர் வீட்டிலேயே விட்டுவிட்டு அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந்தார் சப்-இன்ஸ்பெக்டர் ரவி. அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் போல இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி, சப்-இன்ஸ்பெக்டர் ரவியை முகமலர்ச்சியோடு வரவேற்றார்.

''மிஸ்டர் ரவி! வாங்க, உட்காருங்க. பரவா இல்லே...நம்ம தொழில்லே வெற்றி அவ்வளவு சுலபமா கிடைச்சுடாது. சுலபமா வெற்றிக் கிடைச்சுடும்னு நினைக்கறதும் தவறு. நீங்க எடுத்த முயற்சியிலே வெற்றியோ! தோல்வியோ..... நான் அதைப் பற்றி கவலைப்படலே. ஆனா, உங்க முயற்சியையும், உழைப்பையும் கண்டு நான் பெருமைப்படுறேன். உங்க கடமையைச் செய்ய நீங்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை நான் அவ்வப்போது கேட்டு மகிழ்ந்து போனேன். ஆனா ''...இன்ஸ்பெக்டர் புண்ணியகோடி தன்னுடைய பேச்சை நிறுத்தினார்.

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர் சார்! சொல்லுங்க. நான் எடுத்த முயற்சிகளிலே தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்கிறேன். இல்லை அதற்காக எந்தத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராகவும் இருக்கிறேன்.

''மிஸ்டர் ரவி..நீங்க செய்யற கடமையிலே நான் குற்றமோ குறையோ காணவில்லை..ஆனா''?

''பிறகு? தயங்காமல் சொல்லுங்க. நான் அதை என் வாழ்க்கை உயர்வுக்காக நீங்க சொன்ன அறிவுரைகளாக எடுத்துக் கொள்கிறேன்.''

## இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் இருபது அம்சத் திட்டம்.

பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்படி இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் உற்பத்தி மட்டத்தில், நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கு கொள்ளும் முறை துவக்கப்பட்டுள்ளது. இம்முறையின் முதல் கட்ட நடவடிக்கையாக உற்பத்தி மட்டத்தில் தொழிலாளர்கள் - நிர்வாகத்தினர் கொண்ட 5 குழுக்களும், கூட்டு நிர்வாகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 குழுக்களிலும் குழு ஒன்றிற்கு 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் 6 பேர் தொழிலாளர் பிரதிநிதிகள். கூட்டு நிர்வாகக் குழுவிலும் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் பாதிப்பேர் தொழிலாளர் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

''உங்களைப் போன்ற இளைஞர்கள் வாழ்க்கையிலே உயரணுங்கறத்துக்காகத்தான் நான் நினைக்கிறதை உங்களுக்குச் சொல்லணும்னு நினைக்கிறேன் மிஸ்டர் ரவி''.

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர் சார்!''

''குற்ற இலாகாவிலே பணியாற்ற முன் வந்த நம்மைப் போன்றவர்களுக்கு மனித வாழ்க்கையின் தத்துவங்களும் கொஞ்சமாவது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நல்லவர்களாகவே வாழ நினைத்து வாழத் துவங்கும் மனிதர்கள் குற்றவாளிகளாக ஏன் மாறுகிறார்கள். எதற்காக மாறுகிறார்கள். எதற்காக அந்தக் குற்றங்களைச் செய்கிறார்கள் என்று தெரியும்.''

''உண்மைதான் இன்ஸ்பெக்டர்''.

''மனித வாழ்க்கைத் தத்துவத்தை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டோமென்றால், மனிதர்கள் வாழ்க்கையிலே உயரவும் தவறவும் எதைச் செய்கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம். உயர்ந்தவன் வாழ்க்கையிலே என்ன செய்கிறான். வாழ்க்கையிலே தவறினவன் எதைச் செய்கிறான் என்று புரிந்து கொள்ள முடியும்.''

''உயர்ந்தவன் உருவமும் மனநிலையும் மாறிப் போகிறதே''.

''மனநிலை மட்டுமில்லை, அவர்கள் முகமும் மாறிப்போகும்.''

''முகம் மட்டும் மாறும் என்று நினைக்காதீர்கள். அவர்கள் கண்களே அவர்களை இனம் காட்டிக் கொடுத்துவிடும்.''

''ஊட்டி பங்களாவில் வசிக்கும் மரகதமும், மாரிசாமியும் என் கண் பார்வையில் இருந்து மறைந்து கொண்டதற்கு ஏதாவது வேறு காரணங்கள் இருக்குமோ?''

''எப்படிப் பார்த்தீர்கள், ஏன் பார்த்தீர்கள், எதற்காகப் பார்த்தீர்கள் என்பதில்தான் அவர்கள் மறைந்த காரணம் தெரியும்.''

''ஒரு குற்றவாளியைக் கண்டுபிடிக்க, நாம் நடவடிக்கை எடுக்கும்போது எதை நம்பி எடுத்துக் கொள்ள வேண்டும்?

''பாமரர்கள் சொல்வதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. சான்றோர்களுடைய சொல்லையே நாம் கவனிக்க வேண்டும். அவர்கள்தான் உண்மையை அறிவார்கள்.''

''மனிதன் கொலைகாரனாக மாறக்காரணம்?''

''கோபத்தினால் மனிதன் குற்றவாளியாவதைவிட ஆசையினால்தான் அவன் கொலைகாரனாகவும் மாறிவிடுகிறான். கோபத்தினால் அறிவு கெடுகிறது. உள்ளம் கெடுகிறது. மண், பெண், பொன் ஆசைகளினால் மனிதன் உணர்ச்சிக்கு அடிமையாகி கொலைகாரனாகவும் மாறிவிடுகிறானே!''.



''சுந்தரபாண்டியன் மகன் விநாயகத்தை எதற்காகக் கொலை செய்திருப்பார்கள்?''

''மிஸ்டர் ரவி! அதைக் கண்டுபிடித்து வருவதாகத்தானே என் முன்னிலையில் சபதம் எடுத்துப் போனீர்கள்? இப்பொழுது என்னையே கொலைக்குக் காரணம் என்ன என்று கேட்கிறீர்கள்!''

''மன்னிக்கவேண்டும். தத்துவ ரீதியாகக் குற்றம் புரிபவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததால் தவறுதலாகக் கேட்டு விட்டேன்!''

சப்-இன்ஸ்பெக்டர் ரவி, இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியின் அருகில் இருந்த டெலிபோன் ஒலித்தது. உடனே இன்ஸ்பெக்டர் ரிசீவரை அவசரமாகக் கையில் எடுத்தார்.

(தொடரும்.)

## விடைகள்

1. எவரெஸ்ட் (2.919'8 அடி).
2. கல்கத்தா.
3. மைசூரில் உள்ள கோமதீஸ்வரர் (200 அடி).
4. அலிபூரில் உள்ளது.
5. பீகாரில் உள்ள சோனேபூர் (2,415 அடி).
6. காஷ்மீரில் உள்ள ஜவஹர் பனிஹல் (8,115 அடி).
7. இராமேஸ்வரம் கோயில் (4,000 அடி).
8. உத்தரப் பிரதேசம்.
9. மத்தியப் பிரதேசம்.
10. உத்தரப் பிரதேசம்.
11. மேற்கு வங்கத்திலுள்ள சுந்தர்வனம்.
12. பக்ரா (740 அடி).
13. டெல்லியிலுள்ள குதுப்மினார் (240 அடி).
14. காஷ்மீரிலுள்ள உலர் ஏரி.
15. கிராண்ட் டிரங் சாலை (1,500 மைல்).
16. டெல்லியில் உள்ள ஜும்மா மசூதி.
17. மைசூர் மாநிலத்திலுள்ள ஜெர்சொப்பா அருவி (260 அடி).
18. அஸ்ஸாம்.
19. மகாராஷ்டிரத்தில் உள்ள எல்லோரா.
20. அஸ்ஸாமில் உள்ள சிரபுஞ்சி (ஆண்டுக்கு 500 அங்குலம்).